

# ரமணோதயம்

அக்டோபர் 2014
காலாண்டு

அண்ணாமலை தீப இதழ்
விலை ₹ 20



யோகாம்பிகை அன்னையின்
பாதம் பணிந்து...


# சுந்தரி சில்க்ஸ்

வடக்கு உஸ்மான் சாலை
தியாகராய நகர், சென்னை - 600 017

உதயம் 14 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 1

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

அண்ணாமலை தீப இதழ்
அக்டோபர் 2014

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

- கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.
- மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20
ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் 'ரமணோதயம்' என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா ட்ரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:
குமார் ராஜா: 9444261296
மின்னஞ்சல்: arunamramanam@gmail.com
மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
குமார் ராஜா, ரமண கேந்திரா ட்ரஸ்ட்
41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா ட்ரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

## அண்ணாமலை தீப இதழ், அக்டோபர் 2014


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | | 3 |
| 2 | திருரமணக் குறள் | தாயுமானவன் | 19 |
| 3 | மாபெரும் சாகசம் | ஏகநாத ஈஸ்வரன் | 21 |
| 4 | மனமடங்கில் | கோவிந்த சுவாமிநாதன் | 26 |
| 5 | சிதம்பர ரகஸ்யம் | சு. பரமேஸ்வரன் | 28 |
| 6 | அற்புத மகான் ரமணர் | | 35 |
| 7 | ரிபுகீதை | தியாகராஜன் | 39 |
| 8 | இனிவரும் திருநாட்கள் | | 46 |
| 9 | நான் யார் தெரியுமாவிலிருந்து நான் யார் வரை | Dr.ஏ.வி.ராஜகோபாலன் | 47 |
| 10 | ஸ்ரீ ரமணரின் பொன்மொழிகள் | | 55 |
| 11 | ஸ்ரீ ரமண பாதானந்தர் | ஸ்ரீமதி கனகம்மாள் | 60 |
| 12 | கார்த்திகை தீபம் | | 62 |
| 13 | மனம் | ஜெயா வள்ளியப்பன் | 70 |
| 14 | ரமணோதயம் காப்புநிதி தொடரும் நன்கொடையாளர்கள் | | 72 |
| 15 | செய்திகள் | | 73 |


முன் அட்டை: மாத்ருபூதேச்வரர் ஆலயத்தில் அமைந்துள்ள ஸ்ரீநடராஜர்

பின் அட்டை மற்றும் உள் அட்டைகள்: அன்னை யோகாம்பிகை நவராத்திரி அலங்காரத்தில் மற்றும் துர்க்கை சந்நிதி

# ஆசிரியர் உரை

## தலைமேல் வைத்த தாமரை

ஒன்று மாற்றி ஒன்றாக வந்துகொண்டே இருக்கும் ஆசைகளினால் பிறவி வருகின்றது என்பதைக் கண்டோம்.

*அவாஎன்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்*
*தவாஅப் பிறப்பீனும் வித்து. - குறள் 361*

என வள்ளுவர் கூறுகிறார். அளவுக்கடங்காத ஆசையினால் எண்ணற்ற பிறவிகள் வருகின்றன. மரணம் என்பது பிறவி என்னும் நாணயத்தின் மறுபக்கம். பிறப்பு வந்தால் இறப்பும் உண்டு. பிறவிக்கடலும் மரணக் கடலும் ஒன்றானவை. 'நான் உடலல்ல; ஆத்மா' என்னும் ஞானம் ஆசைகளினாலும், வாசனைகளினாலும் பறிபோகும்போது பிறப்பு-மரணக் கடலில் வீழ்கிறோம். இதிலிருந்து எங்ஙனம் விடுபடுவது? அதற்கு இறைவன் அருள் முத்திரை நம்மீது விழ வேண்டும்.

விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகள் நேர்மையாக வரிசெலுத்திக் கொணரப்பட்ட பொருட்களை, அரசாங்க முத்திரையிட்டு எடுத்துச் செல்ல அனுமதிப்பர். ஆனால் கள்ளத்தனமாய்க் கடத்தப்பட்ட பொருட்களுக்கு முத்திரை இல்லை. அவை சுங்கக் காவல் அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்படும். கடத்தியவனும் சிறைவாசம் அனுபவிக்க நேரிடும்.

தமது வாழ்வில் தம் தலையாய கடமையாகிய ஆத்ம சாதனையைச் செய்யாதவர்தம் உயிர்களை யமன் பறிமுதல் செய்கிறான். அதேசமயம், நேரிய, தூய வாழ்க்கை நடத்தி பக்தியோடும், தியாகத்தோடும் ஆன்ம வழியில் சாதனை செய்வோரை, யமனது

பணியாட்கள் எனும் சுங்க அதிகாரிகள் ஆன்ம விடுதலையை நோக்கிச் சுதந்திரமாகச் செல்ல அனுமதிக்கிறார்கள். ஆத்மசாதனையில் ஈடுபடுவோரை இறைவனே வலியவந்து ஆட்கொண்டு, அவர்கள் தலைமீது அருள் முத்திரை பதிக்கிறான். அந்த முத்திரை கண்ட யமதூதர்கள் அவர்களை சுதந்திரமாக ஆத்ம சாம்ராஜ்யத்தில் பிரவேசிக்க அனுமதிக்கின்றனர்.

. . . . நின்பாதம் என்னும்
வாசக்கமலம் தலைமேல் வலியவைத்து ஆண்டுகொண்ட
நேசத்தை என் சொல்வேன்? - அபிராமி அந்தாதி, 32

தம்பாதக் கமலத்தை அடியார் தலைமேல் வைத்து அருள் புரிந்த பெருங்கருணையை பகவானும் பாடுகிறார்.

வெளிவளி தீநீர் மண்பல வுயிரா
விரிவுறு பூதபௌ திகங்கள்
வெளியொளி யுன்னை யன்றியின் றென்னின்
வேறுயா னாருளன் விமலா
வெளியதா யுளத்து வேறற விளங்கின்
வேறென வெளிவரு வேனார்
வெளிவரா யருணா சலவவன் றலையில்
விரிமலர்ப் பதத்தினை வைத்தே.

- அருணாசல பதிகம், 7

ஐம்பூதங்களின் வடிவாயும், பரிணாமம் ஆகியும் எங்கும் விரிந்து பரந்து இருக்கும் பௌதிக உருவங்களும், பல்வேறு உயிர்களும் சித் சொரூபமான உன்னையன்றி வேறு ஒன்று இல்லை; அப்படி இருக்கும்போது, 'நான்' எனும் தன்முனைப்பு மட்டும் தனித்து எப்படி இருக்க முடியும்? இதயத்தில் அத்வைத சொரூபமான சிதாகாசமாய் நீ ஒளிரும்போது, உனக்கு அயலாய் 'நான்' என்று தனித்துத் தலை தூக்குகின்றானே, இந்த அகம்பாவம் யார்? இந்த அகந்தையின் தலைமீது உனது மலர்ப் பாதத்தை வைத்து

*அதனை ஒன்றுமில்லாமல் செய்து ஞான வடிவமான நீ வெளிவருவாயாக! என்கிறார் பகவான்.*

*அந்த அருணாசல ஆசானின் மலர்ப்பாதம் பூ போன்று மென்மையானது; ஞானவாசம் மிக்கது.*

*முன்னொரு நாள் 'நான்' இந்த அகில அண்டத்திற்கும் அரசன் என்று இறுமாந்திருந்த மகாபலியின் தலையில் திரிவிக்ரமக் கடவுள் தனது பாதத்தை வைத்து பலமாக ஒரு அழுத்தாக அழுத்தி, பாதாளத்திற்கே அனுப்பி விட்டான். அவன் அரக்கன். எனவே, அவன்மீது இறைவன் பாதம் மிக அழுத்தமாக வீழ்ந்தது. நானோ இறைவனின் குழந்தை அல்லவா! எனவே வலியப் பாதம் வைக்காமல், மலர்போன்று மென்மையாகத் தன் திருத்தாட்களை வைக்கிறான் இறைவன். இதுவே 'விரிமலர்ப் பதத்தினை வைத்து' என்ற பகவானின் சொற்றொடரின் சிறப்பு.*

*இந்த அருட்பாதம் பட்டவுடன் வினைகள் முற்றும் அழியும். பிறவித்தளை முற்றிலும் அறும்.*

*வினைப்போகமே ஒரு தேகங்கண்டாய்! வினை தான் ஒழிந்தால்*

*தினைப்போ தளவும் நில் லாதுகண்டாய்!*

*எனப் பட்டினத்தார் பாடுகிறார். வினைகளை அனுபவித்து, மீண்டும் வினைகளையே செய்து பிறவிகள் தோன்றிக் கொண்டே உள்ளன. இந்த வினைகளுக்கு எல்லாம் ஆணி வேராய் உள்ள அகங்காரம் ஒழிந்தால் ஒரு மிகச்சிறிய தினையளவு நேரம்கூட இந்த தேகப்பிறப்பு நில்லாமல் மறையும்.*

*இந்த மகாபலி வரலாற்றின் சுவையான பகுதி ஒன்று உண்டு. மகாபலி அகங்காரம் கொண்டு துள்ளியபோது அவனைத் தன் பாதத்தால் ஒரே அழுத்தாக அழுத்தி, பாதாளம் தள்ளிய திருமால், அவனது அகங்காரம் முற்றும் அழிந்து அவன் ஆன்ம சாதகனாக மாறிப்*

*பாதாளத்தில் அரசோச்சும்போது, திருமாலே அவனுக்குக் காவலாளியாக இருக்கிறான் எனப் பாகவதம் கூறுகிறது. அகந்தை அழிந்த ஆன்மாவுக்கு இறைவனே காவல் என்பது இதன் தாத்பர்யம்.*

*இங்ஙனம் இறைவன் பேரருளைப் பெற்று அவன் அருட் சந்நிதியிலேயே இருக்கும் ஆன்மஞானிகட்கும் மரணபயம் இல்லை. பக்தியே சிறிதும் இல்லாது ஆசையால் தூண்டப்பட்டு தீச்செயலே செய்து வருவோர்க்கும் அந்த பயம் இல்லை போலுள்ளது? அப்படி இருப்பின் அவர்கள் இங்ஙனம் கர்மத்திலேயே உழன்று கொண்டிருப்பார்களா?*

*சந்ததமும் வேதமொழி யாதொன்று பற்றினது*
*தான்வந்து முற்றுமெனலால்*
*சகமீ திருந்தாலும் மரணமுண் டென்பது*
*சதாநிட்டர் நினைவதில்லை.*

*- தாயுமானவர் பாடல்கள், கருணாகரக் கடவுள், 7*

*என்ற மரணபயம் இல்லாத ஞானநிலை உயர்ந்த ஞானியருடையது. இது மரணபயம் அற்ற நிலை. அதே சமயம்,*

*ஆவிக்கு மோசம் வருமாறு அறிந்து உன் அருட்பதங்கள்*
*சேவிக்க என்று நினைக்கின்றிலேன்.*

*- கந்தர் அலங்காரம், பாடல் 105*

*என்று அகங்காரத்தினால் தான் சாஸ்வதம் என்று எண்ணி மரணத்தைப் பற்றி எண்ணாத மாந்தர் நிலையை கந்தர் அலங்காரம் 105ஆவது பாடல் கூறுகிறது.*

*இந்த இருவகை எல்லைக் கோட்டில் இருப்பவர்கள் அன்றி, இடைப்பட்ட நிலையில் உள்ள நம் போன்றவர்கள்தான் பகவானது 'உள்ளது நாற்பது', இரண்டாவது மங்கலப் பாடலில் சுட்டிக்காட்டப்படும் "மரண பயம் மிக்குளவம் அம்மக்கள்". இத்தகைய நல்ல பண்பும் ஒழுக்கமும் உள்ளவர்களையே மரணபயம் தீவிரமாகப் பற்றும். இதிலிருந்து விடுபடுவதற்காக*

அவர்கள் 'அரணாக மரணபயம் இல்லாத மஹேசன் சரணமே சார்வர்'. அங்ஙனம் அவர்கள் இறைவனின் திருவடிகளைச் சரணடையும்போது இதுவரை தம்மைப் பற்றியிருந்த பந்தபாசங்களிலிருந்து விடுபட்டு, 'நான் ஜீவன்' என்ற தவறான எண்ணமும் அழியப் பெறுவர். அந்த நிலையை அடைந்த பின்னர் அவர்கள் மீண்டும் மரணத்தைப் பற்றிய எண்ணத்தைச் சிந்திப்பார்களோ? மாட்டார்கள் எனப் பகவான் அறுதியிட்டுக் கூறுகிறார்.

இங்ஙனம் இறைவன் அல்லது குருவின் கமல பாதங்களைச் சரண் அடைந்தவர்க்கு எத்தகைய அச்சமோ, கவலையோ, தேவையோ சிறிதும் இல்லை. ஒருசமயம் பகவானின் திருமுன்னர் அன்பர் ஒருவர் அமர்ந்து ஆறாகக் கண்ணீர் பெருக்கி, 'பகவானே! இத்தனை நாளாக உங்களையே சார்ந்திருந்தேனே! எனக்கு மனசாந்தி இல்லையே! ஞானம் இன்னும் வரவில்லையே? எனது ஆன்மதாகம் எப்போது தீரும்?' என்று அரற்றினார். அங்கிருந்த தேவராஜ முதலியார், "உங்களது கவலை மிக அழகாக உள்ளது! இது ஒருவன் கங்கைக் கரையில் அமர்ந்துகொண்டு 'என் தாகம் தீரவில்லையே' என்று அரற்றுவதுபோல் உள்ளது" என்றார். அப்போது உள்ளே வந்த முருகனார், "உங்கள் உதாரணம் கூடச் சரியில்லை. இது ஒருவன் கழுத்து அளவுவரை கங்கை நீரில் நின்றுகொண்டு, எனக்குத் தாகம் என்று கூறுவதுபோல் உள்ளது" என்றார். அருட்பேரருவியான பகவானின் சந்நிதானத்தில் இருக்கும்போது, எனக்கு இன்னும் சாந்தியும், ஞானமும் வரவில்லையே என்று அழலாமா என்பது முருகனாரின் கூற்று. இந்தப் பேச்சுக்களை அமைதியாகக் கேட்டுக் கொண்டு இருந்த பகவான், "இல்லை ஓய்! 'இது கங்கையே எனக்குத் தாகம்' என்று கூறுவதுபோல் உள்ளது" என்றார். சாந்தியும், ஞானமும் நிரந்தரமாக உன்னிடமே உள்ளன. எனவே, கவலைப்படத் தேவையேயில்லை என்று கூறியருளினார்.

*கங்கை நீரை அருந்தியபின் வேறு தண்ணீர் தேவையில்லை. தண்ணீர் எங்கே கிடைக்கும் என்ற ஆராய்ச்சியே தேவையில்லை. இறைவன் பகவானுருவில் வந்து என்னைத் தடுத்தாட்கொண்டான். இனி வேறு எதனைப் பற்றியும் ஆராய்ச்சி தேவையில்லை.*

***உமையும் உமையொரு பாகனும் ஏக உருவில் வந்து இங்கு***
***எமையும் தமக்கு அன்பு செய்ய வைத்தார் இனி எண்ணுதற்குச்***
***சமையங்களும் இல்லை ஈன்றெடுப்பாள் ஒரு தாயும் இல்லை***
***அமையும் அமையுறு தோளியர் மேல் வைத்த ஆசையுமே.***

*- அபிராமி அந்தாதி, 31*

*இனி நான் எதைத் தேடியும் ஓடத் தேவையில்லை. தந்தை, தாய், மனைவி, அன்பர் மேல் இதுவரை கொண்டிருந்த பற்றும் ஆசையும் முற்றிலும் நீங்கிவிட்டன. இனி எனக்கு ஒரே பற்றுக்கோடு இறைவன்தான் என்கிறார் அருளில் பழுத்த அடியார். இதுவரை சார்பு ஒன்றுமின்றித் திருப்தியுற்ற என் மனதிற்கு இறைவன் அருள் என்ற கொழுகொம்பு பற்றுக்கோடாய் கிடைத்து விட்டது. இனி எனக்குத் துயரம் ஏதுமில்லை.*

*பைங்கொடி யாநான் பற்றின்றி வாடாமற்*
*பற்றுக்கோ டாய்க்கா வருணாசலா.*

*- அக்ஷரமணமாலை, 72*

*எனவும்*

***மீகாம னில்லாமன் மாகாற் றலைகல***
***மாகாமற் காத்தரு ளருணாசலா.***

*- அக்ஷரமணமாலை, 79*

*என்றும் அடியார் இறைஞ்சும்போது இறைவன் தவறாமல் வந்து கைகொடுக்கிறான்.*

***சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில் ஒன்றிப்***
***படரும் பரிமளப் பச்சைக் கொடி***

*என அபிராமி அந்தாதி (48) கூறுவதையும் இங்கே ஒப்பு நோக்கலாம்.*

பகவானின் அருளை வேண்டி நம் அகம் குழைய வேண்டும். நூல்கள் பல கற்றாலும் அறிவு கூர்மையாகுமே தவிர உள்ளம் குழைவதில்லை. மனம் கல்லாக இருந்தால் அதில் அருள் ஏறுவதில்லை. நம்முடைய இல்லாமையையும், ஆசானின் பெருங் கருணையையும் எண்ணி நம் மனம் நெகிழ வேண்டும்.

*அன்புரு வருணா சலவழன் மெழுகா*
*யகத்துனை நினைந்துநைந் துருகு*
*மன்பிலி யெனக்குன் னன்பினை யருளா*
*தாண்டெனை யழித்திட லழகோ*

என பகவானே அருணாசல பதிகம் 2ஆம் பாடலில் உளம் உருகிப் பாடுவதைக் காண்கிறோம்.

'நின் இட்டம் என் இட்டம்' என்ற பரிபூர்ண சரணாகதி நிலையை பகவான் கூறுகிறார். இங்ஙனம் உள்ளம் கரைந்து வேண்டுதலே முதல் நிலை.

*அம்புவி லாலிபோ லன்புரு வுனிலெனை*
*யன்பாக் கரைத்தரு ளருணாசலா.*

*- அக்ஷரமணமாலை, 101*

என்று, தண்ணீராலே உருவான ஆலங்கட்டி, வெப்பத்தினால் கரைந்து மீண்டும் அந்தத் தண்ணீர் மயமாகவே ஒன்று கலப்பதுபோல், உன் பேரருளில் தன்மயமாக என்னைக் கரைத்து ஆளுவாய் என வேண்டுகிறார் பகவான்.

நமது மனது குப்பை நிறைந்துள்ளதே, இதில் எப்படி இறைவன் வந்து இருப்பான் என்று கவலைப்பட வேண்டாம். ஒரு பெரிய செல்வந்தருக்கு நம் குப்பை நிறைந்த வீட்டைக் கொடுத்து விட்டால், அந்த வீட்டைச் செல்வந்தன் சுத்தமாக்கி, அழகுபடுத்தி அதில் குடியேறுவான் அல்லவா? சாதகர்கள் உள்ளங்கள் ஆரம்பத்தில் பெருமளவில் அழுக்கடைந்துதான் இருக்கும். அதனைச் சுத்தம் செய்ய முயலுங்கள். ஆனாலும் மீண்டும் மீண்டும்

குப்பை வந்து சேர்கின்றதே என வருந்துகிறீர்களா! கவலை வேண்டாம். அதை அப்படியே முழுமையாக குருநாதனிடம் ஒப்படையுங்கள். அவனே அதனைத் தூய்மைப்படுத்தி, அதில் குடியேறுவான்.

*. . . . என்னையுந்தன் இன்னருளால்*
*இப்பிறவி ஆட்கொண் டினிப்பிறவா மேகாத்து*
*மெய்ப்பொருட்கண் தோற்றமாய் மெய்யே நிலைபேறாய்*
*எப்பொருட்குந் தானேயாய் யாவைக்கும் வீடாகும்*
*அப்பொருளாம் நம்சிவனைப் பாடுதுங்காண் அம்மானாய்.*

*திருவாசகம், திருவம்மானை-12*

என்கிறார் அடியார். 'எப்பொருட்கும் தானேயாய், யாவைக்கும் வீடாகும் அப்பொருளாம் நம்சிவன்' என்பது அழகான சொற்றொடர். கல்லும், காளாயும் சேர்ந்து கட்டிய வீட்டை நம் வீடாக எண்ணி மயங்குகிறோம். உண்மையான வீடு அனைத்துப் பொருட்கும் இருப்பிடமாய் உள்ள அவனது அகம். அகமே அருணாசலம். அதுவே யாவைக்கும் வீடு. அதில் எப்பொருளும் அவனேயாய் நிலைபெற்று உள்ளது. அதை அடைவதே வீடுபேறு. அந்த வீட்டினை பஞ்ச இந்திரியங்கள் மூலமாய் அடைய இயலாது.

*ஒருபூ தரும்அறி யாத்தனி வீட்டி ல்உரைஉணர்வுஅற்று இரு.*

*- கந்தர் அலங்காரம், 45*

கந்தர் அலங்காரத்தில் காட்டுகின்ற வீடு அது. அழுக்கு நிறைந்த நாம் அங்குச் சென்றால் நாமே தூய்மை ஆகிறோம். அதுவே இறைவன் அருட்பெருக்கு.

*ஊரங் கணநீர் உரவுநீர் சேர்ந்தக்கால்*
*பேரும் பிறிதாகித் தீர்த்தமாம்.* *- நாலடியார், 175*

என்று நாலடியார் கூறுகிறது. சாக்கடை நீர் போய் கங்கையில் கலந்தால் அது அதற்குமேல் 'சாக்கடை' என்று அழைக்கப்படுவதில்லை. அதுவே புனிதமடைந்து பேர்மாறி அதுவும் கங்கை ஆகிறது. அதுபோலவே, நாம் பகவானிடம் நம்மை முற்றுமாக

ஒப்படைக்கும்போது அவரே நம்மைச் சுத்தமாக்கித் தன்னுடன் சேர்த்துக் கொள்கிறார். 'முற்றுமாக ஒப்படைப்பது' என்பதே இங்கு முக்கியமான தேவை.

பகவானது ஞானத் திருச்சபையில் ஒருமுறை சூரிநாகம்மையார், தெலுங்கு பாகவதத்தில் ஆசைகளை அடியோடு நீக்கியவர் நிலைபற்றிய பாடல் ஒன்றைக் கூறி அதன் பொருளையும் விளக்கினார். அதன் சுருக்கம் இதுவே. 'படுக்கவும் உடுக்கவும் உண்மையும் இயற்கையில் எளிதாம் எவ்வளவோ கிடைக்கின்றன. ஏன் மனிதன் பெரும்பொருளைச் செலவிட்டு வசதிகளைப் பெருக்கிக் கொண்டு வாழ விரும்புகிறான்? இல்லத்தரசிகள் மனமுவந்து பிட்சை இடத் தயாராக இருக்கும்போது திமிர் பிடித்த செல்வந்தர்களிடம் சேவகம் செய்ய விரும்புவது ஏன்?'

இதனைக் கேட்ட பகவான் பற்றற்ற தன்மையின் உயர்வை எடுத்துக் கூறினார். முன்பு வானமே கூரையாய் தரையே படுக்கையாய், அன்பர் கொணர்ந்து தரும் பிட்சையே உணவாய் தான் வாழ்ந்து வந்ததைக் குறிப்பிட்டு, பின்னர் அன்பர்கள் வற்புறுத்தலினால் ஆச்ரமம் வந்தபின் வந்து சேர்ந்த கட்டில்கள் ஆசனங்கள் எல்லாமே அடிமைத்தளைகள் என்று குறிப்பிட்டார். பிறகு பகவான் புத்தர்பிரானைப் பற்றிக் கூறத் தொடங்கினார். புத்தர் அரண்மனையின் வசதிகளைத் துறந்து காடு சென்று தவ வாழ்க்கையை ஏற்று வாழ்ந்தார் அல்லவா? இது அவர் தந்தை சுத்தோதனர்க்குச் சற்றும் பிடிக்கவில்லை. சுகபோக வசதிகளை ஏதோ ஓர் உத்வேகத்தில் துறந்த தன் மகன் ஏக்கத்தில் ஆழ்ந்திருப்பான் என்றே தந்தை நினைத்திருந்தார். ஆனால் புத்தரைப் பார்த்து வந்த எல்லோருமே 'அவர் எல்லையற்ற ஆனந்தத்தில் ஆழ்ந்து திளைக்கிறார்' என்று அரசரிடம் கூறினார்கள். இதனை சுத்தோதனரால் நம்ப முடியவில்லை.

*ஒருநாள் புத்தர் தமது தந்தை நாட்டின் தலைநகருக்கு வந்தார். ஒரு பிச்சைக்காரன் போல் வந்த புத்தரைத் தந்தை அடையாளம் கண்டு கொள்ளவில்லை. மனைவி யசோதரா மட்டுமே அவரை மெய்யாக அறிந்துகொண்டு, தானும் மகன் ராஹுலனுமாக அவரை வணங்கினார். இதன் பின்னர்தான் தந்தைக்கு வந்தது யார் என்று புலப்பட்டது. சினம் பொங்க, 'ஏன் இந்த முட்டாள்தனம்? இத்தனை பேரரசின் வசதிகள் அனைத்தும் உன் காலடியில் இருக்க, இதை எல்லாம் உதறித் தள்ளிப் பிச்சைக்காரனாகத் திரிகின்றாயே! இதனால் என்ன லாபத்தைக் கண்டுவிட்டாய்?' என்று மகனைக் கடிந்து கொண்டார். புத்தர் தந்தையை அருள்விழியால் நோக்கினார். அந்த அருள்பார்வையால் சினமடங்கிய சுத்தோதனர் மனமலர் மலர்ந்தது. அவரும் ஆசைகளை அறுத்து எறிந்து, மகனைப் பின்பற்றி பிக்கு ஆனார். பற்றற்ற நிலையின் பேரின்பத்தை நுகர்ந்து மகிழ்ந்தார்.*

*மகாராஷ்டிரத்திலிருந்து வந்திருந்த ஓரன்பர் சில நாட்கள் ஆச்ரமத்தில் தங்கி பகவானிடம் ஐயம் வினவித் தெளிவுபெற விழைந்தார். இந்தச் சந்தேகங்கள் ஆசைகளினால் சஞ்சலிக்கும் மனத்தை எப்படிக் கட்டுப்படுத்துவது என்பது பற்றியன. அதற்கான தியான வழியைப் பற்றி விளக்குமாறு பகவானை வேண்டிக் கொண்டார். பகவான் அவருக்கு தியானத்தைப் பற்றி விளக்கிக்கூறி, பகவத் கீதை ஆறாம் அத்யாயத்தில் உள்ள சில சுலோகங்களை எடுத்துக்கூறி அவற்றின் பொருளை விளக்கினார். பகவான் வழிகாட்ட எடுத்துரைத்த சுலோகங்களில் ஒன்று சிறப்பாக இங்கே கூறத்தக்கது.*

***யதோ யதோ நிப்ஸ்சரதி மனஶ்சஞ்சலமஸ்தி²ரம்!***
***ததஸ்ததோ நியம்யைததா³த்மன்யேவ வஶம் நயேத்!!***

***- கீதை 6:26***

பொருள்: மனம் இயல்பாகவே அலையும் தன்மை பெற்றது. ஓரிடத்தில் நில்லாது சஞ்சலித்துக் கொண்டே இருக்கும். தியானத்தின்போது அது கட்டுப்படாமல் அலைவதற்கு இதுவே காரணம். உலகப்பொருள்மீது உள்ள நீங்காத ஆசையினால் அவற்றைத் தேடி அலைகின்ற மனதைக் கட்டுப்படுத்தி, உலகப் பொருட்கள் மீது இருந்து விலக்கி, ஆத்மாவின்மீதே அது பதிந்து இருக்கச் செய்ய வேண்டும்.

ஆசைகளைக் கட்டுப்படுத்தல் எளிதன்று. ஆனால் பற்றுக்களைக் குறைத்துக்கொண்டு மனத்தை ஆத்மாவில் பதியும்படி செய்தால் ஓர் அற்புதம் நிகழ்கிறது. ஆத்ம சாதனையில் ஈடுபட்டுள்ளோர் பற்றற்ற பேரின்ப நிலையை அடைவர் என்று படித்தோம். சிறிது நேரமாயினும் மனத்தை உலக விஷயங்களில் இருந்து திரும்ப ஆன்மாவில் ஈடுபடுத்தினால் அந்தப் பற்றற்ற நிலையின் பெருஞ்சுவையை மனம் சிறிது சுவைத்துவிடுகிறது. அந்த ஞாபகம் ஆழ்மனத்தில் தங்கி விடுகிறது. இதன் பின்னர், தொடர்ந்து மனத்தை ஆன்மாவில் ஈடுபடுத்துவது படிப்படியாக எளிதாகிறது. 'தில்லைவெளியில் கலந்து விட்டார் பின்னர் திரும்பியும வருவாரோ?' என்றபடி பற்றற்ற நிலையினை அடைந்து ஆன்ம நாட்டத்தின் சுவையைச் சிறிது உணர்ந்து விட்டாலே போதும். மனம் அதையே மீண்டும் மீண்டும் நாடத் துவங்கும். அடுத்து ஈடுபடும் தியான முயற்சியில் படிப்படியாக மனம் ஒருமைப்பாடு அடைந்து, இறுதியில் ஆத்மாவில் ஒடுங்கும்.

*அஸம்ஸயம் மஹாபாஹோ மநோ து3ர்நிக்ரகம் சலம்!*
*அப்4யாஸேந து கௌந்தேய வைராக்3யேண ச*
*க்3ருஹ்யதே!!*

*- கீதை, 6:35*

என்ற சுலோகத்தையும் பகவான் எடுத்துக்காட்டி, வைராக்யத்தின் சக்தியை விளக்குகிறார். இந்த சுலோகத்தின் பொருள்:

'வலிமை மிக்கவனே! மனது கட்டுக்கடங்காது அது எப்போதும் சலித்துக்கொண்டே இருப்பது. இடைவிடாத பயிற்சியாலும் ஆசைகளை நீக்குவதாலும் மனதைக் கட்டுப்படுத்தலாம். இந்த ஆன்மீகப் பயிற்சியைப் பற்றிப் பகவான்,

கூர்ந்தமதி யால்பேச்சு மூச்சுஅடக்கிக் கொண்டுஉள்ளே
'ஆழ்ந்து அறிக'.

என உள்ளது நாற்பது 28ஆவது பாடலில் குறிப்பிடுகிறார்.

ஆசைகளை எங்ஙனம் அழித்து ஒழிப்பது? இது தொடர்பாக அன்பர்கள் கேட்ட கேள்விகட்கு பகவானே பல சமயங்களில் விடை அளித்திருக்கிறார். எர்ணாகுளம் கல்லூரியின் ஆங்கிலப் பேராசிரியர் ஒருவர் பகவானிடம் இவ்வாறு வினவினார் (திருஅருண்மொழி 495, 29-5-1938)

'ஆசைகளை விட்டுவிட வேண்டும் எனில் முன்னரே அவற்றை நன்கு அனுபவித்துத் திருப்தி அடைய வேண்டாமா?'. பகவான் புன்சிரிப்புடன் பதிலளித்தார்: "ஆசைகளை அனுபவித்து அழித்தல் என்பது தீயைப் பெட்ரோல் ஊற்றி அணைக்க முயல்வது போலாம். அனுபவிக்க அனுபவிக்க ஆசைகள் மேன்மேலும் வளர்கின்றன. ஆசையைத் தவிர்த்தால் மட்டுமே அதன் நாட்டம் பலவீனமுறும். ஆசைகளைப் பூர்த்தி செய்வதால் அவை பலவீனமுறாது மாறாக வலுவடையும்."

அன்பர்: எப்படி ஆசைகளைப் பலவீனப்படுத்துவது?

பகவான்: ஞானத்தின் மூலம் மட்டுமே ஆசையைப் பலவீனமுறச் செய்ய முடியும். நீங்கள் மனம் அல்ல என்பதை முதலில் அறியுங்கள். ஆசைகள் மனதில்தான் இருப்பிடம் கொண்டுள்ளன. எனவே மனம் நான் அல்ல என்று உணரும்போது அதில் குடிகொண்ட ஆசைகளும் வலு இழக்கின்றன.

*அன்பர்: அது தினசரி வாழ்க்கையில் சாத்தியமாகத் தோன்றவில்லை (யே)?*

பகவான்: *ஒவ்வொரு முறை ஆசையைப் பூர்த்தி செய்ய முயலும்போதெல்லாம், இது செய்யத் தகாதது என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். இங்ஙனம் இடையறாது ஞாபகப்படுத்திக் கொண்டே இருந்தால் நாளாவட்டத்தில் ஆசைகள் பலவீனமுற்று அழியும்.*

பகவான்மீது பேரன்பு கொண்டு ஆச்ரமத்திலேயே பலநாட்கள் கழிந்த டாக்டர் சையது என்ற அன்பர், 'ஆசைகளை அறவே அறுக்கவேண்டும் என்று ஆசைப்படுவதும், ஈசனை விரும்புவதும்கூட ஆசைகள்தாமே! இவை நல்ல ஆசைகள் அல்லவா? இவற்றையும் அழித்துவிட வேண்டுமா?' என வினவினார். பகவான் இதற்கு இவ்வாறு விடையிறுத்தார்: "ஆன்மீகத்தின் இறுதிநிலை சம்பூர்ண சரணாகதியே ஆகும். ஆண்டவனிடம் நாம் முழுமையாகச் சரண் அடைந்து விட்டால் பின் நமக்கென்று ஆசைகள் எதுவும் இருக்க முடியாதே! அவனாக முடிவுசெய்து நமக்கு முக்தி அளித்தால் அளிக்கட்டும். நாம் ஏன் அதற்காகக் கவலைப்பட வேண்டும்?" என்பதே.

திருமந்திரத்தின் நல்லுரை இங்கு வாசகர்கட்கு நினைவு வரலாம்.

*"ஆசை அறுமின்கள்! ஆசை அறுமின்கள்!*
*ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள்!"*

தனிப்பட்ட மனிதன் ஆணவம் வளர்ந்து நிற்பதால் ஆசைகளை வளர்த்துக் கொள்கிறான். ஆண்டவனிடம் முற்றிலும் சரணடைந்த பின்னர் அவனது அகங்காரம் முற்றிலும் நசித்துப் போகிறது. அப்படியிருக்க, சரணடைந்த அவன் தனிப்பட்ட முறையில் தனக்கென ஆசைகளைத் தோற்றுவித்துக்கொண்டு, அவற்றை வளர்க்க இடம் ஏது? சரண் அடைந்த கணத்திலிருந்து



ஈசனுடைய சங்கல்பம் அருளாக வெளிப்பட்டு சாதகனின் சங்கற்பங்களை மாற்றி விடுகிறது.

பகவானின் வாழ்க்கை நிகழ்ச்சிகளே இதற்கு விளக்கமாக அமைகின்றன. துறவிவேந்தனான பகவானின் பிறந்த நாளன்று பரோடா மகாராணி அவருக்கு ஜரிகை போட்ட வெல்வெட் சால்வை அனுப்பி இருந்தார். ஆச்ரமத்து ஊழியர் அதைப் பகவானின் உபயோகத்திற்காக விரித்துப் போட்டார். பகவான் உடனே அதனை விட்டு விலகி அமர்ந்தார்.

*எப்படியெல்லாம், எங்கெல்லாம் அதிலிருந்து பகவான் விலகியே இருப்பதைப் பார்த்த ஊழியர் இறுதியில் அதனை அலுவலகத்திற்கே எடுத்துப்போக நேர்ந்தது. பின்னர் பகவான் அங்கிருந்த அன்பர்க்கு விளக்கினார்: அஎன் போன்றோர்க்கு ஆடம்பரமான வஸ்திரங்களே தேவையில்லை. பருத்தித் துண்டே போதும். குளித்து விட்டு இதனால் உடம்பைத் துடைத்துக் கொள்ளலாம். வெயில், குளிர் இவற்றிலிருந்து காத்துக் கொள்ளும் விதத்திலும் இது பயன்படுகிறது. இதைக் கீழே விரித்துப் போட்டால், அதன்மேல் உட்கார முடியும். இது இருக்கும்போது ஆடம்பரமான வெல்வெட் சால்வை எதற்கு? ஏற்கெனவே ஆச்ரமத்தினர் எனக்கு அதிகப்படியான வசதிகளைச் செய்து கொடுத்து இருக்கிறார்கள். எளிய வாழ்க்கையின் சுதந்திர உணர்வை இந்த வசதிகள் அழித்து விடுகின்றன. பொருட்கள் கூடக்கூட சுதந்திரத்தை இழந்து விடுகிறோம். ஆசையை வளரவிட்டால் சாந்தி பறிபோகிறது.*

*(இந்த உரையாடலினைக் கவனியுங்கள். ரமணாச்ரமமே பகவானாகிய கதிரவனைச் சுற்றிய கோள்கள்போல அவரது ஆன்மக் கதிரியக்கத்தையே சார்ந்து இருக்க பகவான் தன்னை ஆச்ரமத்துடன் கூடத் தொடர்புபடுத்திக் கொள்ளாது, "ஆச்ரமத்தினர் எனக்கு அதிகப்படியான வசதிகளை ஏற்கெனவே செய்து கொடுத்து இருக்கின்றனர்" எனத் தம் பற்றற்ற நிலையை வெளிப்படுத்திக் கொள்கிறார். ஜே. கிருஷ்ணமூர்த்தி தமது பிரசித்திபெற்ற வாரணாசிச் சொற்பொழிவான "Truth is a Pathless Land" என்பதில் இதே கருத்தை வெளிப்படுத்தி உள்ளார்).*

*1942ஆம் ஆண்டு கோடைக்காலம் தகிக்கத் துவங்கியது. அன்பர்கள் பகவான் உபயோகத்திற்காக ஒரு மேசை விசிறியைக் கொணர்ந்து வைத்தனர். பகவானோ, "இதெல்லாம் எதற்கு? சாதாரணக் கைவிசிறி*

*இருக்கிறது. எனக்குக் கைகள் இருக்கின்றன. எனக்கு வேண்டும்போது நான் விசிறிக் கொள்கிறேன்" என்றார். கையால் விசிறிக் கொள்வது கஷ்டமில்லையா என்று அன்பர்கள் கேட்டபோது, "இதெல்லாம் என்ன கஷ்டம்? கையால் விசிறிக் கொள்ளும்போது தேவையான காற்று கிடைக்கிறது. மின்விசிறியோ ஒரேயடியாகக் காற்றை வீசுகிறது. மின்சாரச் செலவும் ஆகிறது. இந்தக் கட்டணத்தை ஆச்ரம நிர்வாகம் மட்டும்தான் கட்டவேண்டும். இது வீண் செலவு. அலுவலகத்தில் உழைப்பவர்கட்கு இது தேவைப்படலாம். எனக்கெதற்கு?" என்று அதனை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார்.*

*கடும்வெயிலில் நடக்கும்போதுகூட பகவான் காலணிகளை அணிந்து செல்வதில்லை. கோசாலைக்கு நடந்து செல்லும்போது, வெயிலில் தரை மிகச் சூடேறி வழியில் தண்ணீரைக் கொட்டிக்கொண்டு சென்றனர். இதையும் பகவான் தடுத்துவிட்டார். "தண்ணீரை இப்படி வீணாக்கக் கூடாது. தாகத்தால் வருந்தும் வழிப்போக்கர்களுக்கு இதைக் குடிக்கக் கொடுக்கலாமே!" என்று கூறித் தடுத்துவிடுவார். தமக்கென்று எதுவும் பெற்றுக் கொள்ளாத பகவான், தம் செய்கைகளால், வாழ்க்கை முறையால், ஆசைகள் அற்ற பற்றற்ற நிலையின் மேன்மையினை எடுத்துக்காட்டி வாழ்ந்தார். தத்துவத்தைப் போதிக்க இதுவே ஒப்பற்ற வழி. உள்ளத்தில் பதிய வைக்கும் வழி.*

*'என் தலையில் நின் விரிமலர்ப் பதத்தினை வைத்து என்னைப் பற்றற்றவனாக்குவாய்' என்று இந்த நவராத்திரி சமயத்தில் பகவானை வேண்டுவோம்.'*

*பகவான் பணியில் தங்கள்*

*ராம்மோஹன்*

## தாயுமானவன்

*102* கனகம்மாள் பக்தை கனமுனிவர் பாதம்
தினம்வணங்கி தோய்ந்து இருந் தார்.

*103* ‘காவ்காவ்’ எனமுனி கூப்பிடுவார் ஆடிமயில்
தவ்விவரும் காண மகிழ்ந்து.

*104* கண்கவர் வெண்மயில் அண்ணல் அருகினிலே
கண்ணுற்று ஆர்ப்பரிக்கும் காண்.

*105* அருள்பசு லட்சுமியும் அன்புநாயும் ஜாக்கி
கறுப்புக்காக் கைமானும் காண்.

*106* நோயுற்ற நாய்க்கீந்தார் நள்ளிரவில் முக்திதனை
நேயமது பூர்ண நெறி.

*107* குரங்குக்கும் போதிப்பார் காணார் உடலம்
நரண் அணி சட்டையால் நாம்.

*108* குளவிக் கூடு கலையகால் தட்டி
உளமாற கொட்டஅவை உவந்து.

*109* விரிசல் உற்ற குருவிமுட்டை காக்க
பரிதவித்த பேருள்ளம் பார்.

*110* முட்டை குஞ்சு உடைத்து பறந்திட
மொட்டையார் துள்ளும் மனம்.

*111* பசுவையும் நாயையும் பறவையும் அன்பு
கசிந்து அடக்கம் செய் தார்.

112 தேடிவந்தார் ஞானியிடம் சாதுஓம் பக்தரவர்
நாடி; 'நான்ஆர்' தாமுரண நன்கு.

113 பணிந்து வணங்குங்கால் பீடமதில் மெய்ஞாநி
கனியுருகா ணார்அவர்ஓர் கணம்.

114 வணங்கி நிமிர்ந்தக்கால் மாவியப்பு! குருவாய்
குணக்குன்றாய் நேரிருந்தார் காண்.

115 நோயுற்றும் தீவிரமாய் நாளும் வலியுற்றும்
நேயமும் சாந்தமும் நீர்.

116 ஐம்பத்தி நாலாண்டு தம்மகம் தோய்ந்திட
அம்பரம் கீழே இருப்பு.

117 பதினாலாம் தேதி ஏப்ரல் பொன்னுடல் பூர்ணம்
பதியருணை ஆட்கொண்ட சதி.

118 சோதிஒன்று வான்தோன்றி சோணமலை உச்சிபுக
ஆதியந்தம் இல்லாதான் அருள்.

119 தோத்திரம் செய்தனர் சோதிஎழக் கண்டவர்
எத்துணை அற்புதம் என்று.

120 அற்புதம் அன்றோ அவதாரம் மாரமணர்
நற்பதம் யாண்டும் நாடு.

★★★

*அருவமாய் யார்க்கும் அருள்தன்னை ஈந்து*
*இருந்திடுவாய் என்றும் இனிதே!*

# மாபெரும் சாகசம்

## ஏகநாத ஈஸ்வரன்

கீதையில் மனம் அடங்காதவனுக்கு ஞானம் உண்டாகாது என்பதை க்ருஷ்ண பரமாத்மா கீழ்க்கண்டவாறு விளக்குகிறார்.

*இந்த்ரியானாம் ஹி சரதாம் யன்மனோனு விதீய தே*
*ததஸ்ய ஹாதி ப்ரக்ஞாம் வாயுர் நாவமியாம் பஸி*

*(அத். 2-67)*

கப்பலைக் காற்றானது நீர் மேல் நிலை குலைப்பது போன்று, அலைகின்ற இந்திரியங்களைப் பின்தொடரும் மனது அவனது விவேகத்தை அழிக்கிறது.

த்யானம் என்பது வாழ்நாள் முழுவதும் பழக வேண்டிய ஒரு சாதனை. ஆத்மானுபூதியை இரண்டு மாதங்களிலோ அல்லது இரண்டு வருடங்களிலோ அடைந்துவிடும் எதிர்பார்ப்போடு எவரும் தியானத்தில் ஈடுபட முடியாது. ஆத்மானுபூதி, நிர்வாணம், சமாதி என்று பல்வேறு பெயர்களால் அழைக்கப்படும் இந்த உயர்நிலை, காலத்திலிருந்து விடுபட்டு சனாதனத்தில் நிலை பெறுவதாகும். இந்நிலை எப்பொழுது கிடைக்கும் என்கிற எதிர்பார்ப்பில் ஒரே ஒரு விடைதான் உண்டு. அது நம்மை காலம் என்னும் மாயச் சூழலில் மாட்டி வைக்கும். ஜலாலுதீன் ரூமி என்னும் சூஃபி சந்யாசி பாடுவதைக் கேளுங்கள்.

*இறந்த காலமும் எதிர்காலமும் கடவுளை நம்*
*பார்வையிலிருந்து மறைக்கின்றன;*
*இவை இரண்டையும் அக்னியிட்டுப் பொசுக்கி விடுங்கள்.*
*எத்தனை காலம் தான் நீர்த் தாவரத் தண்டு போல*
*உன்னால் பிரிந்தே கிடக்க முடியும்*
*துளைகளுள்ள புல்லாங்குழலில்*
*ரகசியங்களை மறைக்க முடியாது*
*உதடுகளும் மூச்சும் அளிக்கும் ஒலியை*
*பிரதிபலிக்கவும் முடியாது.*

நமது இலக்கு வெகு தூரத்திலிருக்கலாம். ஆனால் பாதைமாறிய உடனேயே உடல் வலியும், நம்பகத் தன்மையும் மனக்குவிப்பும் தெளிவும் எல்லா வாழ்விலும் அடி நாதமாயிருக்கும் பிரிக்க முடியாத ஒருமையை விலக்கி விடும். த்யானத்தின் மேல் நமது வாழ்க்கையை ஆதாரப்படுத்த இமயமலைக்கோ அல்லது பெருங்காடுகளுக்கோ செல்ல வேண்டிய தில்லை. இன்றே, இப்பொழுதே, குடும்ப வாழ்வின் மையத்திலேயே, சமூகச் சூழலிலேயே இதன் ஆரம்பம் நிகழலாம். அது சமையலறையோ, அலுவலக மேடையோ, வேலை செய்யுமிடமோ - எங்கானாலும் அங்கேயே தியானத்தைத் துவங்கலாம்.

எல்லா மதங்களிலுமுள்ள பெரும் ஞானிகள் சுட்டிக் காட்டுவது போல நமக்கும், சத்தியத்திற்கும் தடைச் சுவர் அகங்காரம் மட்டும்தான். இந்த சம்ஸ்கிருத வார்த்தையை சுய முனைப்பு, தனித்துவம், தற்பெருமை என்றெல்லாம் மொழிபெயர்த்தாலும் முழுமையாகப் பொருள் தராது. பெரும்பாலான மனிதர்களால் இந்தப் பெருஞ்சுவரை எந்த விதமான சிரமுமில்லாமல் எளிதாகத் தகர்க்க முடியும். சம்சார சாகரத்தில் மூழ்கினாலும் சமூகத்தில் ஒரு பகுதியானாலும் இதை அவர்களால் படிப்படியாகச் செய்ய முடியும். காட்டு மரங்கள் மிக அழகானவை. ஆனால் காட்டிற்குச் சென்று தவம் செய்வதால் மட்டுமே அவை நம் மனதை மாற்ற முடியாது. இன்னும் சொல்லப்போனால் குடும்ப வாழ்க்கையின் கஷ்ட நஷ்டங்களுக்கிடையே தான் பொறுமையும் தயையும் மன்னிக்கும் எண்ணமும் வளர முடியும். நமது எண்ண அலைகளோடு ஒத்துப் போகாதவரிடமும் மரியாதை செலுத்தும் பண்பு வளரும்.

காட்டிலும் மலையிலும் பல காலம் தவம் செய்த பிறகு என்னுடைய இளம் நண்பன் தான் பிரபஞ்சத்தைப்

பற்றிய முழுத் தெளிவும் பெற்றுவிட்டதாக மகிழ்ச்சியுடன் கூறினான். இந்த நல்ல செய்தியை நீ ஏன் வீட்டிற்குச் சென்று உன் பெற்றோர்களிடம் அறிவிக்கக் கூடாது என்று கேட்டேன். என்னால் அவர்களோடு ஒத்துப் போக முடியவில்லை என்றான் அவன். பிரபஞ்சத்தையே புரிந்து கொள்ள முடிந்த ஒருவனுக்கு பெற்றவர்களைப் புரிந்து கொள்வது கஷ்டமா?

யாக்ஞவல்கியர் என்னும் இல்லறத் துறவி பிரகதாரண்யக உபநிஷத்தில் தன் மனைவி மைத்ரேயிக்கு உபதேசிக்கிறார். என் அன்பே, கணவன்மேல் நீ வைத்துள்ள அன்பு, அவன்மீது அல்ல. ஆத்மாவின் மீதே வைக்கப்படுகிறது. என் அன்பே, மனைவியின் மீதான அன்பும் அவனுக்காக அல்ல. ஆத்மாவின் பொருட்டே ஆகும். என் அன்பே, குழந்தைகள் மேலான உன் பாசம், குழந்தைகளுக்காக அல்ல. அவர்கள் உள்ளுறை ஆத்மாவிற்காகத்தான்.

மற்றவர்களை மகிழ்ச்சியடையச் செய்வதற்காக நம்முடைய ஆனந்தத்தைத் துறக்கும் பக்குவம் வாய்த்தால் நமது ஞானத்தின் எல்லைகள் விரிவடைந்து பெற்றோரையும் மனைவி குழந்தைகளையும், சொல்லப்போனால் எதிரிகளையும் அரவணைக்கும் மாண்பு உருவாகிறது. உன்னுடைய கணவனை இன்று மட்டும் கணவனாக நடத்து என்கிறது ஒரு விளம்பரம். கணவனை எல்லா நாட்களிலும் அரசனாக மதிக்கத் தெரிந்த மனைவி தானும் மகாராணியாக இருப்பாள் என்பதில் சந்தேகமில்லை.

மற்றவர்களின் நலம் பேணுவது நல்ல பழக்கம். அதைவிட நம்முடைய இந்திரியங்களை அடக்கப் பழகுவது மிக நல்லது. இந்திரியங்கள் என்னும் கடிவாளமற்ற குதிரைகளை பழக்கி நெறிப்படுத்தி நம்முடைய ஆறாமைக்குள் கொண்டு வர வேண்டும். வெகுஜன மீடியாக்கள் மலிந்துவிட்ட இந்தக் காலத்தில்

நிரந்தரமான மகிழ்ச்சியும் மன அமைதியும் பெறுவதற்கு மன அடக்கமொன்றே சிறந்த வழியாகும். மனம் போன வழியில் போனால் மிருக இச்சைகளால் தூண்டப்பட்ட மிகத் தாழ்ந்த வாழ்வையே மேற்கொள்ள வேண்டியிருக்கும். மிருகங்கள் கீழ்த்தரமான உணர்வுகளுக்கு கட்டுப்படுவதுபோல மனிதனும் கட்டுப்பட்டு நடக்க வேண்டியிருக்கும்.

நாம் உண்ணும் உணவில் மூன்றில் ஒரு பாகம் தான் நமக்கு நலம் பயக்கிறது என்று ஒரு ஜென் பழமொழி உண்டு. மீதமுள்ள மூன்றிலிரண்டு பாகம் வைத்தியர்களுக்கு நலத்தைத் தருகிறதாம். அதாவது உடல்நலம் பேணுவதற்காக உண்ண வேண்டும். நாக்கின் ருசிக்கு அடிமைப்பட்டு அல்ல. மனநிலை சரியில்லாதபோது உற்சாகத்தை ஏற்படுத்திக் கொள்வதாக நினைத்து உணவகங்களுக்குப் போய்க் கண்ட அனைத்தையும் தின்று உடலில் ஊளைச் சதையைத்தான் ஏற்றிக் கொள்கிறோம். இனிமேலாவது நாக்கு நம்மை அடிமைப்படுத்த முயலும் போதெல்லாம், ஏ! நாக்கே ஒரு மணி நேரம் காத்திரு என்று ஒரு அதட்டல் போட்டுவிட்டு அந்த ஒரு மணி நேரத்தை சத் விஷயங்களில் பிரயோகித்தால் நம் மனம் தானாகவே உண்ணும் ஆசையை மறந்து விடும். எனவே மனத்தை அடக்க சிறந்த வழி புலன்களின் ஆசையை மறுதலிப்பதுதான்.

மனதை வெற்றி கொள்ள நாளும் சிறிது சிறிதாக படிப்படியாக முயற்சி செய்ய வேண்டும். எல்லையற்ற பொறுமையும் புத்திசாலித்தனமான அணுகுமுறையும் இணைந்தால் தியானத்தில் முன்னேற்றம் காணலாம். பெரும்பாலான சாதகர்கள் தியானத்தில் காணும் ஒரே குறை இடையறாது எல்லா நாட்களிலும் தியானம் செய்ய முடிவதில்லை என்பதுதான். ஒருநாள் காலைப் பொழுது தியானத்தை மறந்தால் அதை ஈடுகட்ட ஒரு வாரமும் போதாது. செயிண்ட் ஜான் என்கிற

மேல்நாட்டு அறிஞர் கூறியபடி கையில் சிக்கிய பறவையை தப்பிக்க விடுவது போல்தான் ஆன்மிக சாதனையில் தடங்கல் ஏற்படுத்துவது. மீண்டும் எட்டிப் பிடிப்பது மிகவும் கடினம்.

ஒரு நாளில் மிகச் சிறிய நேரம் தியானம் செய்ய முடியும் என்ற போதிலும்கூட இடையறாது நமக்கு அளிக்கப்பட்ட மந்திரத்தையோ, அட்சரத்தையோ உச்சரிக்க வேண்டும். நமது நித்யகர்மாக்களினிடையே மிகச்சிறிய இடைவெளி கிடைத்தாலும், அந்த மந்திரமோ, அட்சரமோ நம்முடைய நினைவுக்கு வர வேண்டும். நடக்கும்போதும், நிற்கும்போதும், காத்திருக்கும்போதும், ஏன் தூங்கும்போதும்கூட மனம் மந்திரத்தை இடைவிடாது ஸ்மரிக்க ஆரம்பிக்கும்.

வெளி உலகை ஜெயிப்பதற்கு எந்த அளவு பயிற்சி, திட்டமிடல், வழி கூட்டல் எல்லாம் அவசியமோ அதே அளவு உள்ளிருக்கும் உலகமாகிய மனத்தை வெல்வதற்கும் இவையெல்லாம் தேவை. தேவையான புறச் சாதனங்களும் பயிற்சியும் வழி நடத்தலும் இல்லாத மனிதன் ஒரு நாளும் வெற்றி காண மாட்டான். அதுபோலவே தியானமானது குருவின் துணையால் கட்டுக்கடங்காத மனத்தை வசப்படுத்த உதவுகிறது. மனது சோர்ந்து போகும் வேளைகளில் எல்லாம் குருவின் துணையே நம்மை தியானத்தின் பாதையில் மீண்டும் ஈடுபடுத்துகிறது.

குருவிற்கும் சிஷ்யனுக்குமான உறவு பந்தத்தை அல்ல, மோக்ஷத்தையே உருவாக்குகிறது. பதஞ்சலி தன்னுடைய யோக சூத்திரத்தில் தியானத்தின் இலக்கு கைவல்யமே என்று தெளிவு படுத்துகிறார். நம்மை உள்ளிருந்து வழிநடத்தும் சக்திதான் உண்மையான குரு. அவரை நம் ஹ்ருதய கமலத்தில் தரிசிக்கும் வரை உலகியலான குரு அவசியப்படுகிறார்.

குருவருளன்றி திருவருள் இல்லை.

# மனமடங்கில்

## கோவிந்த சுவாமிநாதன்

பகவான் ஸ்ரீ ரமணரின் பரம பக்தையான அன்னை ஸ்ரீ ஜானகி மாதாவின் மன ஒடுக்கம் என்ற பாடல் கூறுகிறது:

*'அல்ப மனமே நீ அறிவு உதயமாகி*
*அகண்டமாகிய பின்பு அடங்கியிருந்திடாயோ?'*

*வள்ளலாரின் தத்துவ நெறி கூறுகிறது:*

*'மனமெனுமோர் பேய்க்குரங்கு மடைப்பயலே நீதான்*
*மற்றவர்போலெனை நினைத்து மருட்டாதே கண்டாய்'*

பண்டைக் கால முனிவர்கள் மனமடக்கி கடும் தவம் புரிந்தனர். ஆமைபோல் ஐந்தடக்கி என்று ஐம்புலன்களையும் அடக்க வேண்டியது பற்றித் திருக்குறள் கூறுகிறது. மனத்தின் விருத்தியே இவ்வுலகம். எனவே, மனமடங்கினால் ஒருவன் தன் ஸ்வரூபத்தில் நிலைக்கலாம். பகவான் ஸ்ரீ ரமணர் கூறுவார்: சரணாகதி வழியில் நிலைத்து நிற்கும் ஒருவன் குரு அருளினால் மனோநாசம் ஆகப் பெற முடியும். பகவானும் அன்னையும் மனோநாசம் செய்த ஜீவன் முக்தர்கள் ஆவர்.

மனம் என்பது என்ன? அது எண்ணங்களின் கூட்டமாம். மனிதனின் மனமானது சங்கிலித் தொடராக இடைவிடாது எண்ணத்தின் வசப்பட்டதாக இருக்கிறது. பகவான் கூறுவார்: எண்ணங்களின் மூலம், 'நான்' என்ற எண்ணமே. தன்மை எழும்போது முன்னிலையும், படர்க்கையும் உதிக்கின்றன. எனவே, எண்ணங்களின் மூலமான 'நான்' என்ற எண்ணத்தை 'நான் யார்?' என்ற விசாரத்தால் அழிக்க வேண்டும். இவ்விதம் மனோ நாசமானால், ஆன்மானுபூதி ஏற்படும். இந்த விசாரத்தை



ஜானகி மாதா

தைல தாரைப்போல இடைவிடாது இயற்ற வேண்டும். எப்பொழுதும் உள்முக நாட்டம் கொண்டவர்களாக இருக்க வேண்டும். மனதை அழிக்க இதுவே நேரான மார்க்கமாகும். எண்ணங்கள் ஒழிந்த சுத்த மனமே பிரம்ம சொரூபமாகும். இதுவே பரிபூரண நிலையாகும். பூஜை, ஜபம் போன்றவை சுற்று வழியாகும். இவை நிரந்தர பலனை அளிக்க மாட்டா.

'விகுண்ட மான சேதி வைகுண்ட' என்று ஒருநாள் பகவான் அன்னையிடம் கூறினார். இதைத் திருக்குறள், 'மாசற்ற மனம்' என்கிறது.

*மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்*
*ஆகுல நீர பிற.* - திருக்குறள், 34

*பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்*
*பற்றுக பற்று விடற்கு* - திருக்குறள், 350

என்பன குறட்பாக்கள்.

*ஆசை அறுமின் கள் ஆசை அறுமின் கள்*
*ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்கள்*
- திருமந்திரம், எட்டாம் தந்திரம், அவா அறுத்தல்

என்பது திருமூலர் வாக்கு.

# சிதம்பர ரகஸ்யம்

**சு. பரமேஸ்வரன், கோவை**

சைவ உலகில் கோவில் என்றாலே அது சிதம்பரத்தையே குறிக்கும். கோயிலின் பெயரே ஊர்ப்பெயராக வழங்குகிறது. திருமுறைகளில் இத்தலம் தில்லை, தில்லைவனம், தில்லையம்பதி என்றே வழங்கப்பட்டு வந்தது. பஞ்சபூத தலங்களில், ஆகாயத்தைக் குறிப்பது சிதம்பரம். ஆனந்த நடராஜரின் திருமேனி மிகவும் அழகானது. இடப்புறம் சிவகாமசுந்தரியும், வலப்புறம், சிதம்பர ரகஸ்யம் எனத் திரைமறையில் வெட்ட வெளியில் தங்கவில்வ இலைகளும் காணப்படும். உருவ வழிபாட்டிற்கும், அருஉருவழிபாட்டிற்கும், வெட்டவெளி வழிபாட்டிற்கும் அங்கே இடம் உண்டு. ஆடல்வல்லானின் திருமேனி உருவம் ஸ்படிக லிங்கம் அருஉருவம் திரைக்கு பின்பு உள்ளது வெட்டவெளி.

உலகிலுள்ள மனிதர்கள் யாவரும் நுட்பமான அகப்பொருளை அறிந்து, உய்யும் ஆற்றல் இல்லாதவர்களாக இருப்பதால், நமது சரீர இயல்புகளை ஆலயங்களில் வெளிநோக்காகக் காட்டப்பட்டுள்ளது. இவ்வாலயங்களுள் இதயத்தின் நுட்பத்தை விரித்துக் கூறுவதாக சிதம்பரம் கோவில் அமைக்கப்பட்டுள்ளது. திருச்சிற்றம்பலம் என்பதில் திரு என்பது அடைமொழி. சிற்றம்பலம் என்றால், சிறியவெளி அல்ல ஞானவெளி என்று பொருள். மனம் ஆகாசம். சலனமற்ற மனதிற்குச் சிதாகாசம் எனப் பெயர்.

*புறத்துள் ஆகாசம் புவனம் உலகம்*
*அகத்துள் ஆகாசம் எம்ஆதி அறிவு.* - திருமந்திரம்



நடராஜர் ஆலயம், சிதம்பரம்

அண்டத்தில் உள்ளது, பிண்டத்திலும் உண்டு. பிண்டமும் பிரம்மாண்டமும் சமம். மனித உடலில் நடு ஸ்தலமான இதயத்தில் உள்ள சைதன்யமாகிய சிவம் ஆகாசம். சாந்தோக்கிய, கைவல்ய உபநிடதங்களில் கூறப்பட்டதே தகரவித்தை. வேதங்கள், மற்றும் சாத்திர சமயநூல்களைப் பயிலுவதின் நோக்கன் என்னவெனில்:

ஆதியாய் நின்ற அறிவும் முதல் எழுத்து
ஓதிய நூலின் பயன் - அவ்வைக் குறள்

ஆலயங்களில் வெளிநோக்காகக் கண்டவற்றை அகத்தில்,

குறியை குறியாது, குறித்து அறியும் நெறிதனை உணர்வது ஆகும். சிதாகாசத்தில் உள்ள அறிவு சொரூபமான இறைநிலையை அறிவதே குறியாகும்.

உலகின் மையமாக இருப்பது தில்லையெனும் சிதம்பரம். சிதம்பரத்தில் ஆடிய நாதாந்த-ஆனந்த நடனம் ஆழ்ந்த பொருள் கொண்டது. நம் இதயத்தில் சதாகாலமும் அந்த நடனம் நடைபெறுகிறது என உணரும்போதுதான் நுட்பம் புலப்படும்.

எல்லா இடங்களிலும் இறைவன் நீக்கமற நிறைந்திருக்கின்றான். எனவே எந்த இடமும் அவன் இதயமே. சிவநடன தத்துவத்தில் விஞ்ஞானம், கலை, சமயம் யாவும் ஒன்றாய்க் கலந்திருக்கின்றன. நமது தேகமாகிய உடலில் இறைவன் இருக்கிறான். அது உருவமற்றது. ஆனந்தமாய் அறிவாய், எப்போதும் உள்ளது என பொதுவான ஒரு குறிப்பைக் காட்டுவதால் சிதம்பரம் மற்ற எல்லாத் திருத்தலங்களை விட மிகச் சிறந்தது எனலாம்.

உலகில் அனைத்துத் தோற்றங்களுக்கும் பின்னால் மாபெரும் சக்தி இயங்கிக் கொண்டு இருக்கிறது என்கிறது விஞ்ஞானம். அறிவிற்கும், வாக்கிற்கும் அதீதமான ஆதிமுதற் காரணத்தை சாத்திர, சமயநூல்களும், அருளாணர்களும் மறைபொருளாகவே கூறினார்கள்.

அம்பலத்தில் ஆடுகின்ற-பாங்கிமாரே
அவர் ஆட்டங்கண்டு நாட்டங்கொண்டேன்

- என வள்ளல் பெருமானும்,

அறிவு வடிவென்ற றியாத என்னை
அறிவு வடிவென்றருள் செய்தான் நந்தி

- எனத் திருமூலரும்

கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே

எனத் தாயுமானவரும் இறைநிலையை மறை பொருளாகவே கூறினார்கள். ஞானம் பெற்று 54 ஆண்டுகள் மானுடக்கோலங் கொண்டு வாழ்ந்த ரமண பகவான் அந்த இறைநிலையான, ஆத்ம சொரூபத்தை, ஆனந்தத் தாண்டவ மூர்த்தியை, தெளிவாக, உள்ளங்கை நெல்லிக்கனிபோல் 'உள்ளது நாற்பது' எனும் பாடல்களில் குறிப்பிட்டுள்ளார்கள். நாற்பது பாடல்களின் கருப்பொருள், முதலாவதாக உள்ள

காப்பு வெண்பாவில் அடக்கம். இதனை ஒரு வகையில் தியான சுலோகமாகவும் கூறலாம். ஒரு குறிப்பிட்ட சுலோகத்தின் மூலம் ஒரு கலைஞன் தன் மனத் திரையில் தோன்றிய உருவம் ஓவியமாகவோ சிற்பமாகவோ வெளிப்படுகிறது. 54 ஆண்டுகள் தூல உடல் கொண்டு சதா நிஷ்டரான ரமணரின், அந்த நான் உதியாது உள்ளநிலை பேருணர்வாய் உள்ளநிலையே, காப்புச் செய்யுளாய் வெளிப்பட்டது எனில் மிகையாகாது.

பாடலில் உள்ள சொல் மாட்சியைக் கண்டு வியக்கிறோம். 'உள்ளது' என்ற சொல்லே வெவ்வேறு பொருளில் பலமுறை எடுத்தாளும் மடக்கணியாக மலர்கிறது. உயிருக்கு உயிராய் இருந்து இறைவன் உயிரை இயக்குகிறான். அது மனம், வாக்கிற்கு எட்டாதது. அறிவிற்கும் ஆராய்ச்சிக்கும் அப்பாற்பட்டதை 'உள்ளது' என்று சொல்ல, உறுதியான, ஆழ்ந்த நம்பிக்கை வேண்டும். அதை யார் சொன்னாலும் நம்ப வேண்டும்? என்பதில் தெளிவு நமக்கு இல்லையெனில் அந்த நம்பிக்கை பொருளற்றதாகி விடும். ஞானிகளின் வாக்கே வேதம். ஞானிகளின் வரவே வந்த வேதம் எனப்படும். நம்பினார் கெடுவதில்லை இது நான்கு மறை தீர்ப்பு எம் மதமும் சாராத, பொய்யா மொழியார் என்ன சொல்கிறார் எனில்,

ஓர்த்துள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டாப் பிறப்பு - திருக்குறள்,

உள்ளது மெய்ப்பொருள்-உள்ளத்தில் உள்ளது. இதை உணரின் பிறப்பு, துன்பம், பாசம் இல்லை. வள்ளுவரின் குறளுக்கும், பகவானின் பாடலுக்கும் உள்ள சொற்பொருள் ஒற்றுமையைக் காணும்போது ஒரு சில விநாடிகளில் நம்மை நாம் இழந்து விடுகிறோம் அல்லவா? 'உள்ளது நாற்பதில்' உள்ள மங்கல காப்புச் செய்யுளைப் பதம் பிரித்துப் பார்ப்போம்.

*உள்ளதுஅலது உள்ளவுணர்வு உள்ளதோ? உள்ளபொருள்*
*உள்ளலற உள்ளத்தே உள்ளதால் - உள்ளமெனும்*
*உள்ளபொருள் உள்ளல் எவன்? உள்ளத்தே உள்ளபடி*
*உள்ளதே உள்ளல் உணர்.*

மேலோட்டமாகப் பார்த்தால் ஏதோ ஒரு தியான மார்க்கத்தை கூறுவதுபோல் தோன்றும். ஆனால் உட்பொருள் தியானத்தைக் கடந்து செல்கிறது. தியானிப்பவனை யார் எனக் கேட்கிறது? தியானம் என்று ஒன்றும் இல்லை. இருப்பது எல்லாம் ஒன்றே. அது மாறுபாடு அற்று சத்து, சித்தாய் என்றும் உள்ளது.

உள்ளதனை உள்ளபடி உணர்வது உள்ளம்

உள்ளது எதுவோ அதுவே சத்தியம் - மெய்ப்பொருள்

அது ஏகம் பரிபூர்ணம், உள்-வெளி அற்றது. உரு அற்றது. இதயம் எனும் சுத்தசைதன்யத்தில் சர்வமும் அடக்கம். பாடலில் உள்ள சொற்கள் பொருள்கள் நன்கு அறிந்த பின்பு அதனை சிக்கென, உயிர்ப்பிடியாய் பிடித்து கொள்ளுதல் வேண்டும். என்றும் உள்ளதான மெய்ப்பொருளை உணரும்போது அது உள்ளம் எனப் பெயர். தியானிப்பவன் மனம்-அது அறிவு என்று வகைப்படுத்தினாலும் உணரும் நிலையில் உணர்வாய் இருப்பது உள்ளமே. உள்ளது உணர்ந்து கொண்டே பேருணர்வாய் இருக்கும். அவ்வின்ப உணர்வினை நுகராது ஒரு திரைபோல் மனம் செயற்படும். எண்ணுவது, நினைப்பது மனம். அது பொய்பொருள். மெய்ப்பொருளிலும் மாறுபட்டது.

சினமிறக்கக் கற்றாலும், சித்தியெல்லாம் பெற்றாலும்
மனமிறக்கக் கல்லார்க்கு வாய்ஏன் பராபரமே.

என்ற தாயுமானவரின் திருவாக்கை ஒப்பு நோக்கத் தக்கது.

உள்ளதனை உள்ளபடி உணர்தல் என்பது மனம் இறத்தல். மனமற்ற பரிசுத்த நிலை. இந்நிலை கைவரக் காடு, மலை, குகை தேடி அலையவும் வேண்டா,

*காவி உடுத்தவும் வேண்டாம். இதோ அன்பில் பழுத்த நாவுக்கரசரது பாடல் காற்றோடு தவழ்ந்து வருகிறதே!*

*ஒன்றியிருந்து நினைமின்கள், உந்தமக்கு ஊனமில்லை*
*கன்றியகாலனைக் காலால் கடிந்தான்-அடியவற்காய்*
*சென்று தொழுமின்கள், தில்லையுட் சிற்றம்பலத்து...*
*(நான்காம் திருமுறை, கோயில்-2)*

அன்று மார்க்கண்டேயருக்காக காலனைக் காலால் உதைத்தார் ஈசன். இன்று அதே மார்க்கண்டேயரது வயதில் மரணத்தை வென்ற மகேசன் கால அதீதனாய் மோனத்தில் வீற்றிருக்கிறார் அருணையில். தன்னில் வேறாக நினைத்து கடவுளைத் தேடுவது, சம்புல் அறுத்தோன் அதனைக் கட்டுவதற்கு வேறு கயிறு தேடுவதை ஒக்கும். முடிவாக,

*தேடிக்கண்டு கொண்டேன்-திரு*
*மாலொடு நான்முகனும்*
*தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே*
*தேடிக்கண்டு கொண்டேன்*
*- 4ஆம் திருமுறை, பதிகம் 9,பாடல் 12*

என்று திருநாவுக்கரசர் மொழிவதுடன் நிறைவு செய்யலாமா? எல்லாம் சரி, சிதம்பர இரகசியம் என்றால் என்ன? நம் சிதாகாசத்தில் உள்ள அறிவு-சித்தாய், ஆனந்தமாய், பேருணர்வாய் எப்போதும் இருப்பினும் நாம் அதை உணர்வதே இல்லை.

எது எப்போதும் உள்ளதோ அது இல்லாதது போல் தெரிவது - சிதம்பர இரகசியம். மனம் அனுபவிப்பது எல்லாம் இன்பமே தவிர ஆனந்தம் அல்ல. உண்மையில் ஆனந்தம் என்பது சாமானியருக்கு எட்டாக்கனி.

*ஆனந்தம் ஆனந்தம் என்பர் அறிவிலார்,*
*ஆனந்தம் மாநடம் ஆரும் அறிகிலர்*
*ஆனந்தம் மாநடம் ஆரும் அறிந்தபின்*
*ஆனந்தம் அற்றிட ஆனந்தம் ஆமே*
*- திருமந்திரம், ஒன்பதாம் தந்திரம், 15-அற்புதக்கூத்து*

ஆனந்த நிலையில் அனுபவம், அனுபவிப்பவன் எனும் இருமையில்லை. அவை புலன் இன்பநிலையில் உண்டு. ஆனந்தம் என்பதும் அனுபவமும் ஒன்றே. நான்எனும் செருக்கு அற்ற இடம் ஆனந்தம். ஊனக் கண்ணால் காண்பது ஆனந்த நடராஜனின் திருஉருவம். மாசறு காட்சியில் உணர்வது ஆனந்த நடனம். அதுவே சிற்றம்பலம் எனும் சிதம்பர ரகஸ்யம்.

பாராதி பூதம் நீ அல்லை-உன்னிப்
பார், இந்திரியம் காரணம் நீஅல்லை
ஆராய் 'உணர்வு நீ'-என்றான்
ஐயன் அன்பாய் உரைத்த சொல்

'ஆனந்தம் தோழி' - சங்கர சங்கர சம்பு - தாயுமானவர்

எல்லாம் இருந்தாலும் - பசுவே
ஈசர் அருள் இல்லையேல்,
இல்லாத் தன்மை அன்றோ - பசுவே
எண்ணிப் பணிவாயே
ஒன்றைப் பிடித்தார்க்கே - பசுவே
உண்மை வசப்படுமே.
நின்ற நிலை தனிலே - பசுவே
நேர்மை யறிவாயே - இடைக்காட்டு சித்தர்

எல்லா ஞானிகளும் சென்ற பாதை ஒன்றே. ஜாதி, மதம், மொழி, தர்க்கவாதம் என்ற மனநோய்களிலிருந்து விடுபட்டு நோயற்ற ஞான வாழ்வு வாழ அருணை ரமண பகவானை வேண்டுவோம்.

சிற்றறிவு நிலையில் அறிந்ததை குருவருளின் துணைகொண்டு, அருளோடு கற்றால் மனிதன் தன்னுள் பெரிய மாற்றத்தைக் காணலாம். இதற்குப் பரம ஞானியான ரமண பகவானிடம் உண்மை பக்தி பூண்டு அவரது திருவடிகளைப் பற்றி நிற்பதுவே கற்கும் நிலையாகும் எனக் கூறவும் வேண்டுமோ?

ரமண குரு வாழி, அன்பர்களும் வாழியே.

# அற்புத மகான் ரமணர்

*எளிமையை மேற்கொண்டார் கருணையைப் போதித்தார்!*

'எளியோரை எப்போதும் காத்தருள வேண்டும். அவர்களது மகிழ்ச்சியில், நன்றியில் நீயும் எந்நாளும் வாழ்ந்திருக்க வேண்டும்' என்று திருவண்ணாமலை ஸ்ரீஅருணாசலேஸ்வரரை வேண்டியவர் பகவான் ரமண மகரிஷி. 'பிறரை விட உயர்ந்தவன்' என்றோ, 'மாபெரும் ஞானி' என்றோ தன்னை ஒருபோதும் கருதியதே இல்லை ரமணர். உலகின் பல மூலைகளில் இருந்தும் எண்ணற்ற பக்தர்கள் இவரை தரிசிக்க திருவண்ணாமலைக்கு வருவதுண்டு. அப்போது, விலை உயர்ந்த பொருட்களை எவரேனும் காணிக்கையாகக் கொடுத்தால், அன்புடன் மறுத்து விடுவார் ரமணர். அவரது எளிமைக்கும் பற்றற்ற தன்மைக்கும் உதாரணமாக விளங்கிய நிகழ்வுகள் இவை.

பரோடா மகாராணி ஒரு முறை, பட்டு ஜரிகைகளால் ஆன வெல்வெட் சால்வை ஒன்றை ரமண மகரிஷிக்கு அனுப்பி வைத்தார். ஆனால் ரமணரோ, 'வெயில் காலத்தில் வியர்த்தால் முகம் துடைக்கவும், குளிர் காலத்தில் தேவைப்பட்டால் கீழே விரிக்கவும் அரை கஜ அகலமும் முக்கால் கஜ நீளமும் கொண்ட துண்டே போதும். இந்த வெல்வெட் சால்வை வேண்டாம்' என்று மறுத்து விட்டார்.

இதேபோல், அன்பர் ஒருவர் வெள்ளிக் குமிழ் வைத்த பாதுகைகளை ரமணருக்கு வழங்கினார். 'கடவுள் கொடுத்த பாதங்கள் இருக்க, இந்த அலங்காரமெல்லாம் எதற்கு?' என்று கூறி அதை மறுத்து விட்டார்.

*செல்வந்தர் ஒருவர் வெள்ளியால் ஆன ஸ்பூன், கப், சாஸர் ஆகியவற்றை ரமணரிடம் சமர்ப்பித்து, 'இவற்றை நீங்கள் உபயோகிக்க வேண்டும்' என்று வேண்ட, பகவானும் மறுக்காமல் ஏற்றுக் கொண்டார். அந்த அன்பர் சென்றதும், 'இவற்றை ஆசிரம அலுவலகத்தில் வைத்து விடுங்கள்' என்றார். உடனே ஆசிரம அன்பர்கள், 'பகவானது உபயோகத்துக்காக அல்லவா இதைக் கொடுத்துச் சென்றுள்ளார்?' என்று கேட்டனர்.*

*அதற்கு ரமணர், 'நமக்குத்தான் ஏற்கெனவே கப் இருக்கிறதே!' என்றார். அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. பிறகு ரமணர், அருகில் இருந்த அன்பர் ஒருவரிடம் ஏதோ கூற, அந்த அன்பரும் தேங்காய் சிரட்டையைக் கொண்டு வந்தார். 'இதுதான் நம்முடைய கப்' என்றார் ரமணர். தொடர்ந்து அவரே, 'வெள்ளியால் ஆனவை என்றால், அவற்றை கட்டிக் காக்க வேண்டும்; பத்திரமாக உள்ளதா என கவலைப்பட வேண்டும். இதுதான் பாதுகாப்பானது' என்றார் சிரித்தபடி!*

*இதேபோல், அன்பர் ஒருவர் அளித்த வெள்ளிப் பூண் போட்ட அழகான கைத்தடியை ஏற்க மறுத்து, மரக்குச்சிகளைத் தானே அழகாகச் சீவி, கைத் தடியாக உபயோகித்து வந்தார்.*

*அன்பர்கள் பலர், விலை உயர்ந்த பேனா மற்றும் பென்சில்களை அளித்தபோதும் அவற்றைப் புறக்கணித்து விட்டு, சிறிய பென்சிலை மட்டுமே பயன்படுத்தினார்.*

*ஒருமுறை, விலை உயர்ந்த, சத்தான காய்கறி மற்றும் பழங்களைக் கொண்டு சூப் தயாரித்து கொண்டு வந்து கொடுத்தார் ஒரு அம்மாள். இதை அன்புடன் ஏற்றார் பகவான். மறு நாளும் இது தொடரவே, பகவான் மறுத்து விட்டார். 'உடம்புக்கு நல்லது சாப்பிடுங்கள்' என்று கொண்டு வந்தவர் பரிவுடன் சொல்ல, பகவானோ, 'இங்கு உள்ள அனைவருக்கும் தர முடியுமா*

உங்களால்?' என்று கேட்டார். 'அதெப்படி? இதில் விலை உயர்ந்த காய்கறிகளும் பழங்களும் உள்ளனவே!' என்றார் அந்தப் பெண்மணி. உடனே ரமணர், 'பகவானது உடலுக்கு நல்லது என்றால், எல்லோருக்கும் நல்லதுதானே? இதற்கு பதிலாக கேழ்வரகு வாங்கி மாவாக்கி, கஞ்சி காய்ச்சினால் நூறு பேர் சாப்பிடலாம்; உடலுக்கும் நல்லது' என்றார்.



'தினமும் மிஞ்சுகிற பழைய சாதத்தை மண்பானையில் போட்டு, நிறைய தண்ணீர், வடித்த கஞ்சி சிறிதளவு, மோர், எலுமிச்சை இலை, சுக்கு, உப்பு என்று போட்டு வைத்தால் மறுநாள் அது புளித்து, சில்லென்று மேலே தெளிந்து நிற்கும். அந்தப் புளித்த கஞ்சியைக் குடித்தால் எந்த நோயும் வராது' என்று எப்போதும் அறிவுறுத்தி வருவார் ரமணர்.

'விரூபாக்ஷக் குகையில் தனிமையில் இருந்தபோது கிடைத்த சுகத்துக்கு ஈடு இணையே இல்லை. பின்னாளில் கட்டில், மெத்தை மற்றும் சத்தான உணவு என்று பல விஷயங்கள் இருந்தபோதிலும் அந்த சுகம் அலாதி' என்பார் ரமணர்.

விரூபாக்ஷக் குகையில் சிறிய அளவில் ஒரு கட்டிடப் பணியை ரமணரே மேற்கொண்டு செய்தார். அப்போது நடந்த வேடிக்கைச் சம்பவம் ஒன்று. அப்போது முதன்முறையாக அவரைத் தரிசிக்க வந்தவர், 'ஸ்வாமி எங்கே?' என அவரிடமே கேட்டார். உடனே ரமணரும், 'ஸ்வாமியா! இப்பதான் எங்கேயோ போனார்' என்று கூறி விட்டு வேலையைத் தொடர்ந்தார்.

வந்தவர், மலையிலிருந்து இறங்க ஆரம்பித்து விட்டார். பகவானைத் தரிசிக்க முடியவில்லையே என்கிற ஏக்கத்தை, எதிரில் வந்த எச்சம்மா என்ற பக்தையிடம் சொன்னார். 'வாருங்கள் என்னுடன். ஸ்வாமியைக் காட்டுகிறேன்' என்று அவரை அழைத்து வந்து பகவான் முன் நிறுத்தினார். அன்பர் திகைத்தார்; தான் இங்கே வந்து சென்ற விவரத்தை எச்சம்மாவிடம் சொன்னார். 'இவரிடம் ஏன் இப்படிச் சொன்னீர்கள்?' என்று உரிமையுடன் ரமணரிடம் கேட்டார் எச்சம்மா. பகவான் சிரித்தபடி, 'நான் தான் ஸ்வாமி என்று அட்டையில் எழுதித் தொங்கவிட்டுக் கொள்ள வேண்டுமா என்ன?' என்றார்!


# ரமணோதயம்

Voluntary Services

| | |
|---|---|
| K. சுரேஷ் ஜானகிராமன் | 9444127770 |
| ராஜேஷ் M.S. | 9840075778 |
| வஸந்தா ராகவன் | 9445432335 |

# ரிபு கீதை

## தியாகராஜன்

அத்வைத சொரூபத்தின் அபேத நிஷ்டை உரைக்கும் ரிபு கீதையில் 26வது அத்தியாயத்தை மீண்டும் மீண்டும் பாராயணம் செய்தால், அது நம்மை சமாதி நிலைக்குக் கொண்டு செல்லும் என்று ஸ்ரீ பகவான் அருளியுள்ளார்கள். அந்த அத்தியாயத்தின் பாடல்களை, அவை தொடர்பாய் ஸ்ரீ பகவான் அவ்வப்போது அருளியுள்ள விளக்கங்களோடு அடியவர்களுக்கு அர்ப்பணிக்கிறோம்.

எதனிடையிற் கரணமெலா மிலாத தாகு
மெதனிடையிற் கர்த்தாவு மிலாத தாகு
மெதனிடையி னிரதிசயா நந்தந் தோன்று
மெதுதானே நிச்சலமா நிலைமை யாகு
மெதனையறிந் தடைகின்றோ ரென்று மீளா
ரெதுவானோர் பவபந்த மென்று மேவா
ரதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி
யம்மயமா யநவரதஞ் சுகித்தி ருப்பாய். [ 26/23 ]

எதனையறிந் தனவரதஞ் சுகிப்போ ருக்கிங்
கெச்சுகமுந் தற்சுகமா யிலங்கா நிற்கு
மெதையகமென் றதிதிடமா யறிந்த பின்ன
ரெள்ளளவு மன்னியமே யிலாத தாகு
மெதையகமென் றதிதிடமா யறிந்த தாலே
யெவ்விதமாஞ் சீவருமே முத்த ராவ
ரதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி
யம்மயமா யநவரதஞ் சுகித்தி ருப்பாய். [26/24 ]

[பகவத் வசனாம்ருதம் - பாகம் 2 - பக்.302,303 - பதிப்பு 2000] ஸ்ரீ பக: கர்த்தா நான் என்னும் தப்பெண்ணமின்றிச் செயத் தக்கன செய்ய வேண்டும்.

*அத்தகையோன் அகந்தை முனைப்பற்றிருப்பான்; செய்ய வேண்டிய காரியங்கள் தாமே நடக்கும்.*

*ஒவ்வொருவனும் ஒவ்வொரு காரியத்திற்காப் பிறந்திருக்கிறான்; கர்த்தா நானென்று அபிமானித்தாலும் அபிமானிக்காவிடினும் காரியம் நடந்தேறிவிடும். கர்த்ருத்வ புத்தியற்றவன் அவ்வளவு வேலைகளினூடும் கவலை திவலையுமின்றி ஆத்மாகாரனாகவே இருப்பான். கர்த்தா நானெனக் கருதுவோன் குழம்பிக் கொந்தளிப்பான்.*

*கே: கர்ம யோகமென்பது கர்மத்திற் பற்றற்றிருத்தலா, அல்லது கர்ம பலத்திற் பற்றற்றிருத்தலா?*

*ஸ்ரீ பக: கர்த்தா நானென்று அகங்கரியாதிருத்தலே கர்ம யோகம். அந்த நிலையில் ஜீவ அகந்தையின் முனைப்பின்றியே காரியங்கள் தாமே நிகழும்.*

*கே: கர்ம பலனைக் கருதாதிருக்க வேண்டுமல்லவா?*

*ஸ்ரீ பக: கர்த்தா ஒருவனை ஒப்பியே கர்ம பலனைக் கருதாதிருக்க வேண்டுமென்று சொல்கிறோம். கர்த்தாவே நீயல்லவெனில் கர்ம பலனை விரும்புபவன் யார்?*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 2 - பக்.5, 229 - பதிப்பு 2000] ஸ்ரீ பக: மனம் தன் யதார்த்த நிலையில் இருப்பதே இன்பம்; வெளிமுகப்படுவதே துன்பம். வாஸ்த்தவமாயிருப்பது இன்பமே. நமதியல்பே இன்பம். அதை உணராமையே துன்பம். நிரந்தரானந்தமே இயல்பாம் நிருபாதிக ஆத்ம ஸ்வரூபத்தில் நிலைபெறலே விவேகிகள் அனுசரித்தற்குரிய நெறியாம். விஷயானந்தம் க்ஷணிகம்; தீய விளைவுகளை வருவிப்பது. ஆத்மானந்தமோ தீய விளைவேதுமின்றிய நிரந்தரானுபவம். அது நமது நிஜஸ்வரூபமே.*

*[அனுதினமும் ஸ்ரீ பகவானுடன் - பக்.380, 291- பதிப்பு 2003] ஸ்ரீ பக: ஒவ்வொருவனும் அவனுக்கு எது சந்தோஷமளிக்கிறதோ அதன்பின்தானே செல்வான். ஏதோ ஒரு பொருளிலோ வேறெதிலோ ஆனந்தம் வருகிறது என்று நினைத்து நீ அதன்பின் போகிறாய். எல்லாச் சந்தோஷமும், அந்தப் புலன் பொருளிலிருந்து கிடைக்கக்கூடிய சந்தோஷத்தையும் சேர்த்து எங்கிருந்து வருகிறது என்று பார். தன்னில், ஆன்மாவிலிருந்துதான் ஆனந்தம் பிறக்கிறதென்று அறிவாய். அதன்பின் எப்போதும் ஆன்மாவிலேயே நிலைத்து இருப்பாய்.*

*ஸ்ரீ பக: அனைத்தினும் ஒப்பற்ற ஆனந்தத்தை நீ அடையலாம், அதாவது நீயே அந்த ஆனந்தமாக ஆவாய். மற்ற எல்லா விதமான சந்தோஷங்களும், நீ 'இன்பம், சந்தோஷம், களிப்பு, ஆனந்தம்' என்றெல்லாம் பலவாகச் சொன்னது எல்லாம் உன் உண்மை நிலையாகிய, இயல்பில், நீயே ஆன ஆனந்தத்தின் பிரதிபலிப்புகளே ஆகும்.*

*[அனுதினமும் ஸ்ரீ பகவானுடன் - பக்.131,132- பதிப்பு 2003]ஸ்ரீ பக: பிரக்ஞை, அறிவு (ஞானம்) அல்லது இருப்பு என்ற ஒரே ஒரு நிலையே உள்ளது, மூன்று நிலைகளான விழிப்பு, சொப்பனம், தூக்கம் இவை உண்மையாக முடியாது. அவை வந்து போகின்றன. உண்மையானது எப்போதுமிருக்கும். 'நான்' என்று மூன்று நிலைகளிலும் தொடர்ந்து இருக்கும் இருப்பே சத்தியம். மற்ற மூன்றும் இந்த உண்மையல்லாததால் இன்னின்ன அளவு உண்மை என்று சொல்வது தவறு. நாம் ஓரளவுக்கு இப்படிச் சொல்லலாம், இருப்பு அல்லது உணர்வு ஒன்றே உண்மை. உணர்வும் விழிப்பும் சேர்ந்து விழிப்பு என்கிறோம்; உணர்வும் உறக்கமும் சேர்ந்து தூக்கமென்கிறோம்; உணர்வும் கனவும் சேர்ந்து கனவாகிறது. எல்லாப் படங்களும் வந்து போகும்*

*திரையே உணர்வு. திரைதான் உண்மை. படங்கள் அதன் மீது விழும் வெறும் நிழல்கள் மாத்திரம். நீண்ட கால பழக்கத்தினால் நாம் இந்த மூன்று நிலைகளையும் உண்மை என்று கருதி வந்ததால் நாம் சுத்த உணர்வை அல்லது அறிவை நான்காவது நிலை என்கிறோம். என்றாலும் நான்காவது என்ற ஒரு நிலை கிடையாது. 'உள்ளது ஒன்றே'.*

*கே: உண்மை நிலையில், அல்லது ஆன்மா என்னும் திரையில் இந்த மூன்று நிலைகளும் (ஜாக்ரத், ஸ்வப்ன, சுஷுப்தி) வந்து போவானேன்?*

*ஸ்ரீ பக: இந்தக் கேள்வியைக் கேட்பது யார்? இந்த நிலைகள் வந்து போகின்றனவென்று ஆன்மா சொல்கிறதா? இவை வந்து போகின்றன என்று காண்பவன் சொல்கிறான். காண்பவனும் காணப்படுவதும் சேர்ந்து மனமாகிறது. மனம் என ஒன்றுள்ளதா என்று பார்த்தால் அப்பொழுது மனம் ஆன்மாவில் ஒன்றிவிடுகிறது. பிறகு காண்பவனுமில்லை காணப்படுவதும் இல்லை. அதனால் உமது கேள்விக்கு விடை என்னவென்றால், அவை வந்து போகின்றனவா? அவை வருவதுமில்லை போவதுமில்லை. ஆன்மா மட்டுமே எப்போதும் போல் இருக்கிறது. அந்த மூன்று நிலைகளும் அவிசாரத்தின் காரணமாகவே இருப்பதால், விசாரம் அவற்றை ஒழித்து விடும். இதை எவ்வளவுதான் விளக்கினாலும் உண்மை விளங்காது; தானே ஆன்ம ஞானம் அடைந்து, தானாக ஒளிரும் பிரத்யக்ஷமான சத் வஸ்துவைக் கண்டதும், இவ்வளவு காலம் குருடாக எப்படி இருந்தோம் என்று ஆச்சரியமடைவோம்.*

*[அனுதினமும் ஸ்ரீ பகவானுடன் - பக்.215- பதிப்பு 2003] ஸ்ரீ பக: இறப்பு என்பது உனக்குண்டா? யாருக்கு இந்த மரணம்? அழியும் உடலை உறக்கத்தில்*

உணர்ந்தாயா, அது இருந்ததா? உறக்கத்தில் 'உடல்' இல்லை. ஆனால் "நீ" அப்போதும் இருந்தாய்.

விழித்தவுடன் உடலைப் பெற்றாய், விழிப்பு நிலையிலும் "நீ" உள்ளாய். "நீ" தூக்கத்திலும் விழிப்பிலும் இருக்கிறாய். ஆனால் உடல் தூக்கத்தில் இல்லாமல் விழிப்பில் மட்டுமே இருக்கிறது. எது எப்போதும் இல்லாமல் - ஒரு சமயம் இருந்து ஒரு சமயம் இல்லாமல் போகிறதோ - அது சத்தியம் (உண்மைப் பொருள்) ஆகாது. ஆனால் நீ எப்போதும் உள்ளாய், ஆகவே நீ மட்டுமே சத்தியம்.

[பகவத் வசனாம்ருதம் - பாகம் 2 - பக்.18 - பதிப்பு 2000] ஸ்ரீ பக: இல்வாழ்க்கை, ஸம்ஸாரம் என்பதெல்லாம் மனமே. இவையோ, உலகமோ எல்லாம் மனத்தோற்றமே; தோன்றி மறைவனவே. சுதந்தர சத்தின்மையால், ஆன்ம நாட்டத்தால் அவையாவும் ஒழிந்துபோம்.

நிலைத்திருப்பது ஆன்மா ஒன்றே. அநாத்மாவை ஆத்மாவாகக் கருதி அவஸ்தைப் படாதிருப்பதே துறவும் அஞ்ஞானமுமாம்.

[பகவத் வசனாம்ருதம் - பாகம் 2 - பக்.60,61 - பதிப்பு 2000] ஸ்ரீ பக: நமதிருப்பு ஆனந்தமயம். அதனாலேயே அதை மறைக்கின்ற எண்ணக் குழப்பம் அற்றுப்போகும். உறக்கத்தில் நமதியல்பேயாம் ஆனந்தமாயிருக்கிறோம். உறக்கத்தில் துக்க நீக்கமே இருக்கிறது என்பதற்கு துக்கமென்று ஒன்றுமேயில்லை. விழிப்பு நிலையிலுள்ள தேகாத்ம புத்தியே எல்லாக் குழப்பத்திற்கும் மூலகாரணம்.

அநாத்மாவை ஆத்மாவாய்க் கருதும் தவற்றாலேயே இயல்பாம் ஆனந்தம் மறைபட்டாற்போலத் தோன்றுகிறது. அனாத்மாவும் ஆத்மாவுக்கன்னியமாய் இல்லையெனினும், முதலில் அநாத்மாவை

*ஆத்மாவாகக் கருதும் தேகான்மபுத்தி ஒழிந்தாலன்றி நமதியல்பேயாம் ஆனந்தத்தை உணர முடியாது.*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 2 - பக்.64 - பதிப்பு 2000] ஸ்ரீ பக: இன்பத்தை நாடாதவர் யார்? எனினும் துன்பத் தொடர்புற்ற அற்ப சுகத்தையே யாவரும் நாடுகின்றனர். அநித்ய சுகத்தை நாடுவதும் அதனால் விளையும் துன்பத்தை நுகர்வதுமாகக் காலம் செல்கின்றது. இந்நிலையில், முமுக்ஷுவானவன் விவேகத்தால் துன்பத் தொடர்புற்ற அற்ப சுகத்தை நாடாது, நிலைத்த அமைதியையும், ஆனந்தத்தையுமே மேன்மேலும் நல்கும் நிஜஸ்வரூபத்தையே நாடி அதனில் மேன்மேலும் நன்னிலை பெற்ற ஸஹஜானந்தஸ்வரூபமே ஆகிறான். அற்ப சுகத்தை நாடுபவரோ துன்பச்சுழலில் மீண்டும் அகப்பட்டு வருந்துகின்றனர். போகப்போக அகத் தெளிவும் விவேகமும் உற்று அந் நிலையிற் பிராரப்தமாகும் குருவரனின் திருவருளால் நல்வழிச் சார்ந்து, காலக்கிரமத்தில் அதனில் நிலைபெறுகின்றனர்.*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 2 - பக்.228-229 - பதிப்பு 2000] ஸ்ரீ பக: அவாவே துன்பத்தின் வேரெனக் காண்கிறோம். அவா எழுவதேன்? விஷயச் சேர்க்கையால் இன்பம் உண்டாகிறதென்னும் பிராந்தியால் விஷயாசை உண்டாகிறது. இன்ப நாட்டத்தின் காரணமென்ன? நமதியலே இன்பமாதலின் இன்ப நாட்டம் யாவர்க்கும் இயல்பாகவே இருக்கிறது. அது சரியே. ஆனால் இன்பம் விஷயச் சேர்க்கையில் இருக்கிறதென்னும் எண்ணம் பொய்த் தோற்றமே. அறியாமையால் உண்டாகும் விஷய நாட்டத்தால் எழும் தாபம், அவ் விஷயச் சேர்க்கையால், அந் நினைவறலால், ஓர் கணம் நீங்குகிறது; அப்போது தனது இயல்பேயாம் ஆனந்தம் விளக்கமுறுகின்றது. ஆனால் விஷய வேட்கையின் முன்னும் பின்னும்*

*ஏற்படும் துன்பமோ சொல்லொண்ணாதது. மேலும், விஷயச் சேர்க்கையால், துன்ப வேராம் விஷய வாசனை மேன்மேலும் பலப்படுகிறது. க்ஷணிக சுக நாட்டத்தால் இவ்வளவு துன்பத்திற்கும் ஆளாகாது, நிரந்தரானந்தமே இயல்பாம் நிருபாதிக ஆத்ம ஸ்வரூபத்தில் நிலைபெறலே விவேகிகள் அனுசரித்தற்குரிய நெறியாம்.*

*[அனுதினமும் ஸ்ரீ பகவானுடன் - பக்.215- பதிப்பு 2003] ஸ்ரீ பக: முக்தி உனது மறுபெயர். அது எப்போதும் இங்கேயே இப்பொழுதே உன்னுடன் உள்ளது. அதை இனி வென்று பெறவோ அல்லது எங்கோ சென்று அடையவோ வேண்டியதில்லை. "இங்கேயே இப்பொழுதே - இறைவனின் சாம்ராஜ்யம் உனக்குள் உள்ளது, உனக்கு மரணமில்லை" என்று கிருஸ்து கூறியுள்ளார். தாயுமானவர் "உலகத்திலிருந்தாலும் சதா நிஷ்டையிலிருப்பவர் மரண மென ஒன்று உண்டென்று நினைப்பதில்லை" (கருணாகரக்கடவுள் 7) என்று பாடியுள்ளார்.*

*[அனுதினமும் ஸ்ரீ பகவானுடன் - பக்.388- பதிப்பு 2003] ஸ்ரீ பக: மனிதப் பிறப்புதான் மிக உன்னதமென்பது உண்மையல்ல. மனிதனாகப் பிறந்த பின்னரே மோக்ஷம் கிடைக்கும் என்பதும் சரியல்ல. மிருகமும் ஆன்மானுபூதி அடையலாம்.*

*[*Sri Ramana Leela - Pg.*244-245* - Edition *2006] பசு லக்ஷ்மி இறந்த அன்று ஸ்ரீ பகவான் தானே ஒரு தமிழ் வெண்பா ஆக்கி அருளினார்கள். அதில் "லக்ஷ்மி விமுக்தி அடைந்தாள்" எனக் குறிப்பிட்டார். இது குறித்து தேவராஜ முதலியார் பகவானிடம் கேட்டபோது, ஸ்ரீபகவான் "விமுக்தி" என்பது "முக்தி" என்பதையே குறிக்கிறது என்றார்.*

*[நான் யார் - பக். 8 - பதிப்பு 2008] ஈசன் பேரில் எவ்வளவு பாரத்தைப் போட்டாலும், அவ்வளவையும்*

அவர் வகித்துக் கொள்ளுகிறார். சகல காரியங்களையும் ஒரு பரமேச்வர சக்தி நடத்திக் கொண்டிருக்கிறபடியால், நாமும் அகற்கு அடங்கியிராமல், 'இப்படிச் செய்ய வேண்டும், அப்படிச் செய்ய வேண்டும்' என்று சதா சிந்திப்பதேன்? புகை வண்டி சகல பாரங்களையும் தாங்கிக் கொண்டு போவது தெரிந்து இருந்தும் அதிலேறிக் கொண்டு போகும் நாம் நம்முடைய சிறிய மூட்டையையும் அதிற் போட்டுவிட்டுச் சுகமாயிராமல், அதை நமது தலையிற் தாங்கிக் கொண்டு ஏன் கஷ்டப்பட வேண்டும்?

# இனிவரும் திருநாட்கள் - 2014

| | | | |
|---|---|---|---|
| நவம்பர் | 27 | வியாழன் | கார்த்திகை தீப விழாத் தொடக்கம் |
| டிசம்பர் | 5 | வெள்ளி | கார்த்திகை தீபம் |

## 2015

| | | | |
|---|---|---|---|
| ஜனவரி | 6 | செவ்வாய் | ஸ்ரீ பகவானது 135ஆவது ஜயந்தி |
| | 15 | வியாழன் | பொங்கல் |
| பிப்ரவரி | 3 | செவ்வாய் | சின்னஸ்வாமிகள் ஆராதனை |
| | 17 | செவ்வாய் | மகா சிவராத்திரி |
| மார்ச் | 10 | செவ்வாய் | சுந்தரம் ஐயர் தினம் |
| | 20 | வெள்ளி | ஸ்ரீவித்யா ஹோமம் |
| | 21 | சனி | தெலுங்கு வருடப் பிறப்பு |
| | 28 | சனி | ஸ்ரீராம நவமி |
| ஏப்ரல் | 14 | செவ்வாய் | தமிழ் வருடப் பிறப்பு |
| மே | 1 | வெள்ளி | ஸ்ரீபகவானது 65ஆவது ஆராதனை |

மேற்கண்ட விழா நிகழ்வுகளின் மாற்றங்களை அறிய ஆச்ரம இணையதளம் www.sriramanamaharshi.org பார்க்கவும்

# நான் யார் தெரியுமாவிலிருந்து நான் யார் வரை

**Dr. ஏ.வி. ராஜகோபாலன்**

மேலைநாட்டு தத்துவ உலகின் உயர்ந்த கலங்கரை விளக்கமாகத் திகழ்பவர் சாக்ரடீஸ் ஆவார். தன்னுடைய தத்துவங்களை உரையாடல்கள் மூலமாகவே வெளிப்படுத்திய இவர், நூல்கள் எதுவும் இயற்றவில்லை. புரட்சிகரமான சித்தாந்தங்களை எடுத்துரைத்த இவரை, ஒரு சமுதாய விரோதியாகவே பாவித்த அந்நாளைய கிரேக்கத் தலைமை, இவரது கருத்துக்களை ஏற்கத் தயாராக இல்லை. இளைஞர்களைப் பெரிதும் கவர்ந்த இந்தத் தத்துவமேதை இறுதிக் கட்டத்தில் விஷமருந்தி உயிர் நீத்தார் என்பது சரித்திரம் சாற்றும் சோகக்கதை.

இவருடைய சீடரான பிளேட்டோ, பிரபு குலத்தில் பிறந்தவர். Academy என்னும் பல்கலைக்கழகத்தை நிறுவி, தத்துவம், விஞ்ஞானம், கணிதம் போன்ற பல துறைகளில் பற்பல மேதைகளை உருவாக்கினார். புகழ் பெற்ற தத்துவ மேதையான அரிஸ்டாட்டில் இவரிடம் பயின்றவரே ஆவார்.

பிளேட்டோ சாக்ரடீஸின் கருத்துகளைத் தன்னுடைய நூல்களான The Republic, Philebus, The Symposium போன்றவை மூலமாக வெளியுலகத்திற்குப் பரப்பினார். இதனூடே தன்னுடைய சொந்த கருத்துக்களையும் சாக்ரடீஸின் வாய்மொழியாகவே பரப்பினார். இவருடைய தத்துவங்களில் “The Analogy of the Cave” என்பது மிகவும் புகழ்பெற்றது. இது The Republic என்னும் நூலில் காணக்கிடைக்கிறது. இது மனித குலத்தின் குறுகிய கண்ணோட்டத்தைச்

செவ்வனே எடுத்துக் கூறுகிறது. இந்த உருவகத்தில், சில மனிதர்கள் ஒரு இருள் சூழ்ந்த குகையின் உள்ளே காணப்படுகிறார்கள். உடல்கள் பிணைக்கப்பட்ட நிலையில் அவர்களால் குகையின் ஒரு சுவரை மட்டுமே பார்க்க முடிகிறது. சற்றும் திரும்ப இயலாத நிலையில் அவர்களால் பக்கவாட்டிலோ பின்பக்கமாகவோ பார்க்க இயலாது. கட்டுண்ட அவர்களின் பின்புறம் அகலமான ஒரு நடைமேடை அமைந்துள்ளது. அதன்பின்னே பிரகாசமான ஒரு அக்னி ஜ்வாலை காணப்படுகிறது. நடைமேடையில் சில மனிதர்கள் பல்வேறு பொருட்களை ஏந்தியவாறு செல்கின்றனர். அந்தக் காட்சிகள் குகையின் சுவரில் பிரதிபலிக்கின்றன.

இந்தக் குகை மனிதர்களின் உலகம் சுவரில் தெரியும் இந்தக் காட்சிகளில் அடங்கி விடுகிறது. வெளி உலகம் என்று ஒன்று இருப்பதே இவர்களுக்குத் தெரியாமல் போய்விடுகிறது.

இந்த உருவகம் இக்காலத்திற்கு மிகவும் பொருந்தும். மனிதகுலம் இந்தக் குகை மனிதர்களைப் போன்று நிழல்களையே நிஜமாக நம்புகிறது. உண்மையை அறிய அவர்கள் முயல்வதில்லை. பந்தபாசங்கள் அவர்களைக் கட்டுப்படுத்தி பரம்பொருளை அறியவொட்டாது அவர்களைப் பிணைத்து விடுகிறது. இந்த நிழல் உலகமே ஸ்திரமானது என்று நம்ப வைத்து விடுகிறது.

பிளேட்டோவின் குகை மனிதர்களைப் போல் நாமும் நிழல்களை விமர்சித்து, அவற்றையே உண்மைப் பொருளாக மதித்து நம் வாழ்வைக் கழிக்கிறோம்.

இந்தக் கருத்து இந்திய வேதாந்தத்திற்குப் புதிது அல்ல. பிளேட்டோவின் (கி.மு. 428-348) காலத்திற்குப் பல நூறாண்டு காலத்திற்கு முன்பே பாரததேசத்து ரிஷிகள், இந்த உண்மையை உணர்ந்து, ஒரு அழகிய உபமானத்தின் மூலம் இதை விளக்குகிறார்கள்.

முண்டகோபநிஷதத்தில் காணப்படும் அக்காட்சியை நாம் ரசிக்கலாம்.

*த்வா சுபர்ணா சயுஜா சகாயா*
*சமானம் வ்ருக்ஷம் பரிஷஸ்வ ஜாதே*
*தயோரன்ய: பிப்பலம் ஸ்வாது அத்தி*
*அனஸ்னன் அன்ய: அபிசாகசீதி (முண்டகம் 3-1)*

பொருள்: இரண்டு அழகிய பறவைகள், மிக நெருங்கிய நண்பர்கள். அவை ஒரே மரத்தில் சேர்ந்து வாழ்கின்றன. அவற்றுள் ஒரு பறவை, அந்த மரத்தின் பழங்களைச் சுவைத்து உண்கிறது. மற்ற பறவையோ, பழங்களைச் சுவைக்காது, அந்த முதல் பறவையையே பார்த்துக் கொண்டிருக்கிறது.

சிறிய அமைப்பு. முதல் பறவை பிளேட்டோவின் குகை மனிதர்களைப் போல அந்த மரத்தின் சுவையற்ற பழங்களையே தன் உலகமாகக் கொண்டு வாழ்கிறது. அதற்கு உண்மை (மெய்ப்பொருள்) விளங்குவதில்லை. ஒரு கட்டத்தில் அப்பறவை பழங்களில் சுவை இல்லை என்று உணர்கிறது. தன்னுடைய தோழனின் உயரிய பெருமையை உணர்கிறது.

*சமானே வ்ருக்ஷே புருஷோ நிமக்ன:*
*அநீசயா சோசதி முஹ்யமான:*
*ஜுஷ்டம் யதா பச்யதி அன்யமீசம்*
*அஸ்ய மஹிமான மிதி வீதசோக: (முண்டகம் 3-2)*

'அநீசயா' என்ற சொல் குறிப்பிடத்தக்கது. தன்னுடைய உயர்ந்த கதியை மறந்து அப்பறவை பழங்களை உண்ணுதல் என்கிற இந்த்ரிய சுகங்களையே நாடிச் செல்கிறது. ஒருநிலையில், பற்றுகள் நீங்கும் நிலையில் பரம்பொருளின் உயரிய நிலையை உணர்ந்தவுடன் சோகம் நீங்கப்பெறுகிறது. (வீதசோக:). மற்றப் பறவையுடன் அது அந்த மரத்திலிருந்து பறந்து சென்றுவிடுகிறது.

இந்திய உபநிஷதக் கருத்துக்கும் பிளேட்டோவின் உருவகத்திற்கும் சில ஒற்றுமை-வேற்றுமைகள் காணப்படுகின்றன. உலகத்து மாந்தர்கள் நிழலை நிஜமாகக் கருதுகின்றனர் என்ற அளவில் பெரிய ஒற்றுமை காணப்படுகிறது. குகை மனிதர்கள் நிழல்களைப் பற்றியே பேசி, அதிலேயே உறைகின்றனர். அவற்றை வருணிப்பதில் திறமை மிக்கவன். அந்தக் கூட்டத்தில் ஒரு மேதாவியாக, கெட்டிக்காரனாகக் கருதப்படுகின்றான். இந்நிலைமை, ஜீவாத்ம இயல்புக்கு மிகவும் ஏற்றதாகக் காணப்படுகிறது. இது ஒற்றுமை.

ஆனால் இந்தியத் தத்துவம், ஜீவராசிகளுக்கும் பரத்துக்கும் அடிப்படையில் பேதமில்லை என்று விளக்குகிறது. இரண்டும் சமமான ஒளிபடைத்த, நெருங்கிய தோழர்கள் என்றே பேசுகிறது. திருமழிசை ஆழ்வார் - நான் இல்லாமல் நீ இல்லை; நீ இல்லாமல் நான் இல்லை - என்ற தத்துவத்தால் பரமாத்ம-ஜீவாத்ம ஐக்கியத்தை உணர்த்துகிறார். அக்ஷரமணமாலையில் ரமணர், பரம்பொருளின் ஒருநிலையை அழகுபட உரைக்கிறார்.

ஒருவனாம் உன்னை ஒளித்துஎவர் வருவார்
உன்சூதே இது அருணாசலா (அக்ஷரமணமாலை, 12)

ஒளிமயமான பரத்தை, அறியாமை என்னும் இருள் சூழ்ந்து, இருட்டடித்து விடுகிறது. இதுவும் இறைவனின் லீலா விநோதம். இதை ஞானம் என்னும் கத்தியால் வெட்டித்தள்ள வேண்டும். ஏனெனில் ஞானத்திற்கு ஒப்பாக உலகில் ஏதொன்றும் இல்லை (நஹி ஞானேன சத்ருசம் பவித்ரம் இஹ வித்யதே - பகவத் கீதை). ஆனால், ஜீவாத்மாவும் பரமாத்மாவின் முழு அம்சமே. ஆதலால், இது கடினமான செயல் அல்ல. ஞானோதயம் கிட்டுவதும் அசாத்யமானதன்று என்பதே உபநிஷத சித்தாந்தம்.

இந்தத் தத்துவ நிலையில் மேற்கத்திய வேதாந்தம் சற்றே வேறுபடுகிறது. குகை மனிதன், தன்னுடைய அறிவால் குகையினின்றும் வெளிவருகிறான். ஆனால் வெளியே உள்ள ஒளிப்பிரகாசம் அவனை வாட்டுகிறது. கண்கள் கூசுகின்றன. துன்பம் வதைக்கிறது. சிறிது காலத்திற்குப்பின் அவன் தந்நிலை அடைகிறான். தான் பெற்ற உயரிய அனுபவத்தைப் பிறருடன் பகிர்ந்து கொள்வதும் அவனுக்கு விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவன் பரமாத்துவத்தின் அம்சம் என்பது ஏற்கப்படவில்லை. இது தவிர பிற அம்சங்களில் இது இந்திய தத்துவ நெறியையே பின்பற்றுகிறது.

“நான் யார்” என்ற கேள்விக்கு வருவோம். மனிதப் பிறவிக்குப் பலவிதமான வேறுபட்ட வாழ்க்கை முறைகள் கிடைக்கின்றன. பல கதவுகள் அவன் எதிரே திறக்கப்படத் தயாரான நிலையில் உள்ளன. சில கதவுகள் திறப்பதற்கு சுலபமாகத் தோன்றுகின்றன. அவன் அவற்றினுள் ஒன்றைத் தேர்வு செய்கிறான். அதனுள் கவர்ச்சிகரமான பல நிகழ்வுகள் உள்ளன. அதை ரசிக்கத் தொடங்குகிறான். அந்த நிகழ்வுகள் வெறும் நிழல்கள் என்று அவன் உணர்வதில்லை. வெகுவிரைவில், அவன் அந்தக் கவர்ச்சித் தோற்றங்களுக்கு அடிமையாகி, கட்டுப்பட்டுத் தன் சுதந்திரத்தை இழக்கிறான். அதிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள அவன் முயலுவதுகூட இல்லை. சுவையற்ற அந்த நிழல்களையே உண்மையெனக் கொண்டு, வாழ்நாளைக் கழிக்கத் தொடங்குகிறான்.

இது ஒரு கிரஹஸ்தனின் நிலை. வீடு, காரியாலயம், சினிமா, தொலைக்காட்சி, கைபேசி என்ற வட்டத்துள் வாழ்வு அவனுக்கு அடங்கி விடுகிறது. இதைத் தாண்டி துக்கத்தில் துவளாது (துக்கேஷு அனுத்விக்னமனா:) சுகத்தில் நிலை பிறழாமல் (சுகேஷு விகதஸ்புருஹ:) ஆசை, பயம், கோபம் (வீதராக பய க்ரோத:) என்ற

நிலைகளைத் தாண்டுபவனே 'ஸ்திதப் பிரக்ஞன்' எனப்படுகிறான்.

*துக்கேஷு அனுத்விக்னமனா: சுகேஷு விகதஸ்புருஹ:*
*வீதராக பயக்ரோத: ஸ்திதநீ: முனிருச்யதே*
*(பகவத் கீதை: அத். 2)*

இந்நிலை எய்தப்பெற்றவன், இருள் மிகுந்த சம்சார வாழ்விலிருந்து விடுபடுகிறான். அவன் இப்பொழுது சஞ்சரிக்கும் பாதை ஒளி மயமானது. அந்த நிலையில் அவன் எதைக் காண்கிறான் என்பதைத் திருவாசகத்தின் மூன்றாம் பதிகமான திருவண்டப்பகுதி விளக்குகிறது.

*இன்னிசை வீணையில் இசைத்தோன் காண்க (35)*
*பரமன் காண்க, பழையோன் காண்க*
*அற்புதன் காண்க, அநேகன் காண்க*
*சொற்பதங் கடந்த தொல்லோன் காண்க (40)*
*சித்தமும் செல்லாச் சேட்சியன் காண்க*
*பத்தி வலையில் படுவோன் காண்க*
*ஒருவன் என்றும் ஒருவன் காண்க*
*விரிபொழில் முழுதாய் விரிந்தோன் காண்க (45)*

பேரின்பப் பேராற்றில் அமிழ்ந்து கடுமையான தத்துவத்தை இனிய தமிழில் தந்தருளிய மாணிக்கவாசகப் பெருமாள் எத்தகைய பரம்பொருளை 'அறிந்து கொள்க' என்ற பலவிதமாக விவரித்தாரோ, அதை இந்த ஜீவன் உணரும் பேறு பெறுகிறான்.

இது யாரோ மிகச்சிலரே அடையக் கூடிய ஒளிமயமான பாதை. ஆனால் ஒவ்வொரு ஜீவனும், இந்த ஒளியை ஓரளவாவது உணர முயல இயலும். இதற்கு, லௌகீக வாழ்வில் சில உடல், மனக் கட்டுப்பாடுகள் தேவை. ஆசை வலையில் முழுவதும் சிக்காமல், சற்றே ஆன்மீகப் பாதையில் பயணிக்கும் 'பேராசை' தேவை. பலனை விரும்பாது செயலாற்றும், கேண்மையை வளர்த்துக் கொள்ளுதல் மிகமிக அவசியம். கசாப்புக் கடையில் வேலை பார்த்துக்

*கொண்டே தத்துவ மேதையாக வாழ்ந்த தர்மவியாதரை நாம் அறிவோம். கீதையும், விதுர நீதியும் பறைசாற்றுவது இந்த வாழ்க்கை முறையையே.*

*இந்த மனோபாவம் சாதாரண மனிதருக்கு மட்டுமல்லாது, சூது, வாது, ஒற்றாடல், பகை யொழித்தல் என்பன போன்ற செயல்களிலேயே வாழ்நாளையெல்லாம் கழிக்கும் அரசனுக்கும் கூடத் தேவை என்பதை இந்திய நீதிசாஸ்திரம் விளக்குகிறது.*

*கௌடில்யரின் 'அர்த்தசாஸ்திரம்' அரசனின் கடமைகள், ராஜ்யத்தை நிர்வகித்தல், பகைவரை அழித்தல் போன்ற விவகாரங்களை விரித்துக் கூறும் நூல். "தர்மம், அர்த்தம், காமம் என்ற மூன்று புருஷார்த்தங்களையும் சமமாகப் பாவிக்க வேண்டும். இவற்றுள் அர்த்தம் (செல்வம்) என்கின்ற புருஷார்த்தமே முதன்மையானது. ஏனெனில் தர்மமும் காமமும் அர்த்தத்தையே அடிப்படையாகக் கொண்டவை" என்பது சாணக்கியரின் வாதம்.*

*"அர்த்தமேவ பிரதானமிதி*
*கௌடில்ய: அர்த்தமூலெள*
*ஹி தர்ம காமெள இதி"*

*இந்த நூல் தத்துவ ஆசிரியர்களால் பெரிதும் ஏற்றுக் கொள்ளப்படாத நூல். இதை 'நிர்வாக சாஸ்திரம்' என்று அந்த நோக்கிலேயே பார்க்கப் படுகிறது. பொருளாதாரத்தைப் பற்றிக் கூறவந்த இந்த நூலிலும்கூட, மனக் கட்டுப்பாடு, இந்திரிய நிக்ரகம் போன்றவை பேசப் படுகிக்றன என்பது இந்திய கலாச்சாரத்தின் பெருமை. இந்திரிய அடக்கத்தைப் பற்றித் தொடக்கத்திலேயே ஆசிரியர் தெளிவாக எடுத்து உரைக்கிறார். "சத்ரு ஷட்வர்கம்" என்று காமம், க்ரோதம், லோபம், மோகம், மதம், மாத்சர்யம் என்னும் 6 குணங்கள், மனிதனின் ஆறுவகைப் பகைகளாக வருணிக்கப் படுகின்றன. இவற்றை மன்னன் அடக்கியாள வேண்டும். இல்லாவிடில் என்ன ஆகும்*

என்பதை நூலாசிரியர் பல்வேறு உதாரணங்களுடன் விளக்குகிறார். பல மன்னர்கள் இந்த 'சத்ரு ஷட்வர்கம்' என்னும் எதிர்மறை குணங்களுக்கு ஆட்பட்டு அழிந்து போயினர். இவர்களின் வரலாறை சுருக்கமாகக் குறிப்பிட்டுக் கௌடில்யர் எச்சரிக்கை விடுக்கிறார்.

"ஏதே சாந்யே ச பஹவ:
சத்ரு ஷட்வர்க மாஸ்ரிதா:
ச பந்து ராஷ்ட்ரே ராஜான:
விநேசு: அஜிதேந்த்ரியா:

இத்தகைய தீய ஒழுக்கங்களை வெல்லாதவர்கள் செல்வத்தையும் அரசனையும் உற்றாரையும் இழக்கின்றனர் என்று தெளிவுபடுத்துகிறார் ஆசிரியர். நிர்வாக சாஸ்திரத்தைக் கூறும் நூலின் ஆரம்பத்திலேயே (பாகம் 1, அத்தியாயம் 6) இவ்வாறு இந்த்ரிய நிக்ரஹத்தை ஆணித்தரமாக வெளியிட்டிருப்பது பாரத தேசத்தில் ஒழுக்கத்திற்கும் கட்டுப்பாட்டிற்கும் அளிக்கப்பட்ட, முக்கியத்துவத்தை உணர்த்தும். புலனடக்கம், கேவலம் சந்நியாசிகளுக்கும் வான பிரஸ்தர்களுக்கும் மட்டும் விதிக்கப்பட்ட நியமம் அன்று. அது அனைத்து மக்களுக்கும் பொருந்தும். ஏன், செல்வச் செழிப்பும் போகங்களும் பெற்று இன்ப வாழ்க்கை வாழும் சூழலில் இருக்கும் அரச குடும்பத்தாருக்கும், அது கூறப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

பிளேட்டோ காண்பித்த philospher-king (வேதாந்த-வேந்தன்) தத்துவமும் சாணக்கியனின் நீதியும் ஒரே பாதையில் சஞ்சரிக்கின்றன அல்லவா! "நான் யார்" என்பதை உணர, சந்நியாசிக்கும், சாம்ராஜ்யத்தைக் கட்டிக் காக்கும் மன்னருக்கும்கூட புலனடக்கம் தேவை என்பதை உலக வேதாந்தங்கள் அனைத்துமே கூறுகின்றன. இதுவே ஒளிமயமான பாதையைக் காட்டும் வழிகாட்டி.

# ஸ்ரீ ரமணரின் பொன்மொழிகள்

'நான்' என்ற அகந்தை எல்லாச் செயல்களையும் நாமே செய்கிறோம் என்ற தவறான கருத்தை உண்டாக்குகிறது. உண்மையில் நாம் ஒரு கருவியே; கர்த்தா அல்ல. இதை உணர்ந்துவிட்டால், அகந்தை நம்மிடமிருந்து வெளியேறி விடும்.

எவ்வளவுக்கு எவ்வளவு பணிந்து நடக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நன்மையுண்டு.

பகவானுக்கு ருசி முக்கியமில்லை. அடியார்களது பக்திதான் முக்கியம்.

நம் மனம் யாரிடம் வசப்படுகிறதோ அவரே சரியான குரு.

பரம்பொருளைத் தொடர்ந்து விடாமல் பற்றி நிற்பதே சமாதி எனப்படும்.

புதிய ஆசைகளை வளர்க்காதீர்கள். புதிய வாசனைகளைத் தேடிக் கொள்ளாதீர்கள். அதுவே நீங்கள் செய்திருக்கக்கூடிய தவற்றிலிருந்து மீளுவதற்கு உரிய பிரயாச்சித்தம் ஆகும்.

பிறப்பும் இறப்பும் வாழ்க்கையின் எல்லைகள். இந்த இரண்டையும் கடந்து நிற்பதே ஆன்மா அதை உணர்ந்தால் இந்த இரண்டுமே பொருள்ளற்றதாக ஆகிவிடும். தன்னை உணர்ந்த மனிதன் - இந்த நிலைகளைக் கடந்துவிடுகிறான். இறப்பு அவனைப் பாதிப்பதில்லை.

ஒரு மனிதன் தனது வாழ்க்கையில் தேடிக்கொள்ளும் நற்பலன்கள் அதிகமாக இருந்தால், அதை ஒட்டி

அவனுக்கு மரணத்துக்குப் பின் இனிய அனுபவம் ஏற்படுகிறது. கெட்ட பலன்களே அதிகமாக இருந்தால் துன்பம் நிறைந்த அனுபவம் உண்டாகிறது.

நூல்களில் மூன்றுவித தீக்ஷைகள் கூறப்பட்டுள்ளன. ‘ஹஸ்த தீக்ஷை’ என்பது சீடனின் சிரசைத் தொட்டு அருள் புரிதல், ‘சக்ஷுதீக்ஷை’ என்பது அருட்பார்வையால் தீக்ஷை அளிப்பது. ‘மானசீக தீக்ஷை என்பது மனதினால் அருள் புரிதல், இவற்றில் மானசீக தீக்ஷையே அனைத்திலும் சிறந்தது.

முயற்சி செய்து மனத்தை எண்ணங்களிலிருந்து விடுவிக்க வேண்டும். அந்த நிலையில் தொடர்ந்து நாம் இருப்போமேயானால் அதுவே நமது சாதனைகளுக்கு வழிவகுக்கும்

நம்மால் எதிலும் தனித்து செயல்பட முடியவில்லை என்றால் அதற்குக் காரணம் நமது வலிமை அற்ற மனம் தான்.

தவறான செயல்களைச் செய்துவிட்டு, அகந்தையின் காரணமாக அதை மறைத்தல் கூடாது. எனவே குற்றங்களைச் செய்யும் பழக்கத்தை விட்டுவிட்டு நல்ல ஒழுக்கத்துடன் வாழப் பழகுதலே சிறப்பு.

அறிவின் சொரூபமே சச்சிதானந்தம்.

மனம் அடங்கியபின் ஜகம் மறையும்.

மனம் என்பது ஆத்ம சொரூபத்திலுள்ள ஓர் அதிசய சக்தி. அது சகல நினைவுகளையும் தோற்றுவிக்கிறது. நினைவுகளையெல்லாம் நீக்கிப் பார்க்கின்றபோது தனியாய் மனம் என்று ஒரு பொருள் இல்லை. ஆகையினால் நினைவே மனிதன் சொரூபம். நினைவுகளைத் தவிர்த்து ஜகம் என்பது அன்னியமாயில்லை.

மனதின் சொரூபத்தை விசாரித்துக் கொண்டே போனால் மனம் தானாய் முடியும்.

நான், நான் என்று எண்ணிக் கொண்டிருந்தாலும் கூட அவ்விடத்தில் கொண்டு போய்விட்டுவிடும். மனதில் தோன்றும் நினைவுகள் எல்லாவற்றிற்கும் நான் என்னும் நினைவே முதல் நினைவு. இது எழுந்த பிறகே ஏனைய மற்ற நினைவுகள் எழுகின்றன. தன்மை தோன்றிய பிறகே, முன்னிலை படர்க்கைகள் தோன்றுகின்றன. தன்மையின்றி முன்னிலைப் படர்க்கைகள் இரா!

மனம் எப்படி அடங்கும் என்றால் 'நான் யார்' என்னும் விசாரணையினாலேயே, 'நான் யார்' என்னும் நினைவு மற்ற நினைவுகளை எல்லாம் ஒழித்து முடிவில் தானும் அழியும். பிறகு சொரூப தரிசனம் உண்டாம்.

எத்தனை எண்ணங்களை எழுப்பினால் என்ன, ஜாக்கிரதையாய் ஒவ்வொரு எண்ணமும் கிளம்பும் போதே இது யாருக்குண்டாயிற்று என்று விசாரித்தால் எனக்கு என்று தோன்றும்.

நினைவே மனதின் சொரூபம். நான் என்னும் நினைவே மனத்தின் முதல் நினைவு. அதுவே அகங்காரம்.

மனம் அளவிறந்த நினைவுகளால் விரிகின்றபடியால் ஒவ்வொரு நினைவும் அதிபலவீனமாகப் போகின்றது. நினைவுகள் அடங்க, ஏகாக்கிரகத் தன்மையடைந்து அதனால் பலத்தை அடைந்த மனத்திற்கு ஆத்ம விசாரம் சுலபமாய் சித்திக்கும்.

தொன்று தொட்டு வருகின்ற சகல விஷய வாசனைகளும் ஒடுங்கிச் சொரூப மாத்திரமாய் இருக்கமுடியுமா, முடியாதா என்கிற சந்தேக நினைவிற்கு இடம் கொடாமல் சொரூப தியானத்தை விடாப்பிடியாகப் பிடிக்க வேண்டும். தான் பாபி என்னும் எண்ணத்தையும் அறவே ஒழித்து சொரூப

தியானத்தில் ஊக்கமுள்ளவனாயிருந்தால் அவன் நிச்சயம் கடைத்தேறுவான்.

நல்ல மனம், கெட்ட மனம் என்று இரண்டு மனங்கள் இல்லை. மனம் ஒன்றே. வாசனைகளே சுபமென்றும் அசுபமென்றும் இரண்டுவிதம், மனம் சுபவாசனை வயத்தாய் நிற்கும்போது நல்ல மனம் என்றும், அசுபவாசனை வயத்தாய் நிற்கும்போது கெட்ட மனமென்றும் சொல்லப்படும்.

உலக விஷயங்களிலும், பிறர் காரியங்களிலும் - மனதை விடக்கூடாது. பிறர் எவ்வளவு கெட்டவர்களாய் இருந்தாலும் அவர்களிடத்தில் துவேஷம் வைக்கலாகாது.

எவ்வளவுக்கெவ்வளவு தாழ்ந்து நடக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நன்மையுண்டு. மனத்தை அடக்கிக் கொண்டிருந்தால் எங்கேயிருந்தாலும் இருக்கலாம்.

நான் என்கிற நினைவு கிஞ்சித்தும் இல்லாத இடமே சொரூபமாகும். அதுவே மௌனம் எனப்படும். சொரூபமே ஜகம், சொரூபமே நான், சொரூபமே ஈசுவரன், எல்லாம் சிவஸ்வரூபமே.

என்னென்ன நினைவுகள் உற்பத்தியாகின்றனவோ அவற்றை ஒன்றுகூட விடாமல் உற்பத்தி ஸ்தானத்திலேயே நசுக்கிப் போடுவதே வைராக்கியம். வைராக்கியத்துடன் தன்னுள் ஆழ்ந்து மூழ்கி முத்தை அடையலாம்.

எவன் தன்னையே கடவுளாகிய - சொரூபத்தினிடத்தில் தியாகம் செய்கிறானோ அவனே சிறந்த பக்திமான்.

குருவின் அருள்பார்வையில் பட்டவர்கள் அவரால் ரக்ஷிக்கப்படுவாரேயன்றி ஒருக்காலும் கைவிடப்படார். எனினும் ஒவ்வொருவருக்கும் தம் முயற்சியினாலேயே

கடவுள் அல்லது குரு காட்டிய வழிப்படி தவறாது நடந்து முக்தியடையவேண்டும்.

முக்தியில் விருப்பமுள்ளவனுக்குத் தத்துவங்களின் விசாரணை அவசியமே இல்லை. பிரபஞ்சத்தை ஒரு சொப்பனத்தைப்போல எண்ணிக் கொள்ள வேண்டும்.

கனவில் மனம் வேறொரு தேகத்தை எடுத்துக் கொள்கிறது. ஜாக்ரம், சொப்பனமிரண்டிலும் நினைவுகளும் நாம ரூபங்களும் ஏக காலத்தில் நிகழ்கின்றன.

எல்லா நூல்களிலும் முக்தியடைவதற்கு மனத்தை அடக்க வேண்டுமென்று சொல்லப்பட்டுள்ள படியால் மனோ நிக்ரகமே நூல்களின் முடிவான கருத்து என்றறிந்து கொண்ட பின்பு நூல்களை அளவின்றிப் படிப்பதால் பயனில்லை.

மனம் வெளிவரும்போது துக்கத்தை அனுபவிக்கிறது. உண்மையில் நமது எண்ணங்கள் பூர்த்தியாகும் போதெல்லாம் அது தன்னுடைய யதாஸ்தானத்திற்குத் திரும்பி ஆத்ம சுகத்தையே அனுபவிக்கிறது.

நிராசையே ஞானம், நிராசை வேறு ஞானம் வேறன்று.

உண்மையில் இரண்டும் ஒன்றே. நிராசை என்பது ஒரு பொருளிலும் மனம் செல்லாமலிருப்பது.

சும்மா இருப்பதற்குத்தான் ஞானதிருஷ்டி என்று பெயர். சும்மாயிருப்பதாவது மனத்தை ஆத்ம சொரூபத்தில் லயிக்கச் செய்வதே அன்றி பிறர் கருத்தறிதல், முக்கால முணர்தல், தூர தேசத்தில் நடப்பனவறிதல் ஆகிய இவை ஞான திருஷ்டியாக மாட்டா.

பந்தத்திலிருக்கும் தான் யாரென்று விசாரித்துத் தன் யதார்த்த சொரூபத்தை தெரிந்து கொள்வதே முக்தி.

# ஸ்ரீ ரமண பாதானந்தர்

## ஸ்ரீமதி கனகம்மாள்

ஸ்ரீ ரமண பகவானுடைய அடியார்களின் முக்கியமான ஒருவரான ரமணபாதானந்தரது ஊர் கும்பகோணம். இவர் வைணவ குலத்தைச் சேர்ந்தவராய் இருந்தும் முருகப்பெருமானிடம் மிக்க ஈடுபாடு உடையவர். எப்பொழுதும் நெற்றியில் விபூதி பூசிக்கொண்டு, கழுத்தில் ருத்ராக்ஷம் அணிந்து சிவபக்தராகத் தோற்றமளிப்பார். தேவாரம் திருப்புகழ் பாடுவதில் இவருக்கு மிக்க மகிழ்ச்சி.

சந்நிதிமுறையின் பாடல்களை இசையுடனும் தாளத்துடனும் பாடுவதில் வல்லவர். எல்லாப் பண்முறைகளையும் அறிந்தவர். முருகனாரை கண்ணெனப் போற்றிக் காத்தவர். முருகனார் எழுதிய பல நூல்கள் ரமண பாதானந்தரால்தான் அச்சேற்றி வெளியிடப்பட்டன.

ஸ்ரீ ரமண சந்நிதி முறை என்ற நூலை உலகில் பாடிப் பரவச் செய்வதே தனது பெரும் தொண்டாகவும் தவமாகவும் நினைத்து, அதற்காக தமிழ்நாடு மட்டுமன்றி திரைகடல் கடந்து தமிழ்பேசும் மக்கள் வாழும் நாடெல்லாம் சென்று பிரசாரம் செய்த பேருழைப்பாளி.

ஸ்ரீ பகவான் முருகனார் என்னும் பெயர்களை நினைக்குந்தோறும், பேசுந்தோறும் விம்மி அழுது பரவசமடையும் பண்பினர்.

சேக்கிழார் பெருமான் பாடிய பெரிய புராணத்திற்கு அனபாய சோழன் விழா எடுத்ததைப் போலவே, ஸ்ரீ ரமணபகவானின் புகழைப்பாடிய முருகனாரின் ஸ்ரீ ரமண சந்நிதிமுறைக்கும் விழா எடுத்து கொண்டாடி

மகிழ வேண்டுமென்பது பாதானந்தரின் பேரவா. அவரது அவா தமிழ்நாட்டில் நிறைவேறவில்லை. திரைகடலோடி திரவியம் தேடிய தமிழ் அன்பர்கள் அவரது ஆசையை நிறைவேற்றி வைத்தார்கள்.

தமிழர்கள் வாழும் சிலோன், கோலாலம்பூர் போன்ற இடங்களுக்கு இந்நூலை எடுத்துச்சென்று, இசை வல்லுனர்களைக் கொண்டு பாடச் செய்தார். கோலாலம்பூரில் இதனை ஒரு பெரிய விழாவாகவே கொண்டாட ஏற்பாடு செய்தார்.

தமிழ் நாட்டிலிருந்து புகழ்பெற்ற நாதஸ்வர வித்வான்களை அழைத்துச் சென்று, ஸ்ரீ ரமண சந்நிதிமுறை நூலை பட்டால்மூடி யானைமேல் ஆசனமிட்டு இந்த நூலை வைத்து, வாணவேடிக்கைகளுடன் கோலாகலமாக வீதியுலா வரச் செய்தபோது, அங்கு வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் எல்லாம் ஒன்றுகூடி, அந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டு ஜெயஜெய போற்றி என்று வானதிர கோஷமிட்டுக்கொண்டு உடன் வந்த காட்சியை நேரில் கண்டவர்கள் சொல்லும்போது நமக்கு பெரும் வியப்பாக இருக்கிறது. இதேபோல் யாழ்ப்பாணத்திலும் விழா எடுத்தார்.

ஸ்ரீ ரமணபகவான் சந்நிதியின் முன்பு தினமும் பூஜை வேளைகளில் ரமண சந்நிதிமுறையிலிருந்து பாடல்களை எடுத்துப் பாடிக்கொண்டு கண்ணீர்மல்க நின்று உருகுவார். இந்த ரிய அடியார் தனது வாழ்நாளின் கடைசியில் ஆச்ரமத்திலேயே இருந்தார். சரீரம் சிறிது காலம் நோயுற்று இருந்தாலும் மனம் தளராமல், பகவானிடமே மனதை செலுத்தி அமைதியுடன் ஸ்ரீ ரமண பகவானின் திருவடியடைந்தார். ஸ்ரீ பகவானது அடியார்களுள் என்றும் நினைவிற் கொள்ளத்தக்கவர் ரமணபாதானந்தர்.

# கார்த்திகை தீபம்

*ஆதி நடம் ஆடுமலை அன்றிருவர் தேடுமலை*
*சோதிமதி ஆடரவம் சூடுமலை -நீதி*
*தழைக்குமலை ஞானத் தபோதனரை*
*வாவென்றழைக்கு மலை அண்ணாமலை*

- குரு நமச்சிவாயர்

இந்து மதத்தில் மும்மூர்த்திகள் எனப்படுபவர்கள் பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வர் ஆவார்கள். படைத்தல், காத்தல், அழித்தல் என்பது முறையே இவர்களுடைய பொறுப்பாகும். இவர்களில் மகேஸ்வரர் எனப்படும் சிவனாருக்கு இந்தியா முழுவதிலும் கோவில்கள் உள்ளன. இந்த உலகமானது நீர், நிலம், நெருப்பு, வாயு, ஆகாயம் எனும் ஐந்து பூதங்களால் உருவாக்கப் பட்டுள்ளது.

இதனை அடிப்படையாகக் கொண்டு, சிவ வழிபாட்டில், இந்த ஐந்து பூதங்களையும் முன்னிறுத்தி, தனித்தனியாக ஐந்து இடங்களில் உள்ள கோவில்களில் ஐம்பூதங்களுக்கான வழிபாடு நடக்கிறது. இந்த ஐந்து சிவத்தலங்களையும் பஞ்சபூதங்கள் என்று அழைக்கிறார்கள். பஞ்ச என்றால் ஐந்து (5) என்று பொருள்படும்.

பூதம் என்றால் பொருள் அல்லது சக்தி என்பதாகும். பஞ்ச பூதங்கள் என்றால், ஐந்து மூலசக்திகள் அல்லது ஐந்து அடிப்படை மூலாதாரங்களை குறிப்பதாகும். இவற்றில் ஒன்று குறைந்தாலும் உயிரினங்கள் வாழ முடியாது. ஆகவே அவற்றை இறைவனுக்கு இணையாக மதித்தனர் நம் முன்னோர்கள்.

ஆகவே முத்தொழில் முதல்வனான சிவனுடைய தலத்தில் அந்த ஐம்பூதங்களையும் வணங்கி வழிபட்டனர். இந்தத் தத்துவத்தின் அடிப்படையில் பஞ்ச பூதங்கள் ஒளி பெற்றுச் சிறப்படைய வேண்டும் என்பதற்கு ஐந்து முகவிளக்கும், தீபாராதனைகளும் காட்டப்படுகிறது. பஞ்ச பூதங்களைப் பற்றித் தெளிவாகவும் நுட்பமாகவும் உணர்ந்த நமது பெரியோர்கள் ஒவ்வொரு பூதத்தின் பெயராலும் ஒரு தலத்தை ஏற்படுத்தி உள்ளனர்.

அவை பஞ்சபூதத் தலங்கள் எனப்படும். அவை வருமாறு:-

1. நிலம்- காஞ்சீபுரம், திருவாரூர்.

2. நீர்- திருவானைக்காவல் (திருச்சி)

3. நெருப்பு- திருவண்ணாமலை (அருணாசலம்)

4. வாயு- திருக்காளஹஸ்தி (ஆந்திராவின் சித்தூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது)

5. ஆகாயம்- சிதம்பரம்

இந்த பஞ்சபூதத் தலங்களில் நெருப்புத் தலமான திருவண்ணாமலை பல சிறப்புகளையும், தனித்துவங்களையும் கொண்டது.

சம்பந்தர், அப்பர், மாணிக்கவாசகர் ஆகியோரது பாடல் பெற்ற தலமாகும். நினைத்தாலே முக்தி தரும் தலம். சிவமும் சக்தியும் ஒன்றே என்பதை உணர்த்துவதற்காக அர்த்தநாரீஸ்வரராக வடிவம் எடுத்ததும், சிவராத்திரி விழா உருவானதுமான பெருமையை உடைய தலம் திருவண்ணாமலை. சிவன் கார்த்திகை மாத கிருத்திகை நட்சத்திரத்தில், திருமால், பிரம்மன் இருவருக்கும் அக்னி வடிவமாக காட்சி தந்தார்.

*அடி முடி காணமுடியாத அனற் பிழம்பாகத் திருவண்ணாமலையில் எம்பெருமான் எழுந்தருளியுள்ள தத்துவத்தை உலகிற்கு உணர்த்தவே திருமாலும் நான்முகனும் எம் பெருமானின் அடிமுடி தேடினர் என்று சொல்லப்படுகிறது.*

*படைத்தல் தொழிலைச் செய்யும் பிரம்மனும் காத்தல் தொழிலைச் செய்யும் விஷ்ணுவும் நானே பெரியவன் என்று வாதாடிப் பல வருடங்கள் போரிட்டனர். இவர்களின் கர்வத்தை அடக்க எண்ணிய சிவபெருமான், இவர்கள் முன் சோதிப்பிழம்பாகத் தோன்றினார். அடியையும், முடியையும் தேடும்படி அசரீரி கூறியது. அந்த ஜோதியின் முடியைக் காண அன்னப் பறவை வடிவங்கொண்டு சதுரமுகப் பிரம்மன் விண்ணுலகை நோக்கிப் பறந்தார். அடியைக் காண திருமால், வராஹ அவதாரம் எடுத்து பாதாள லோகம் சென்று அடிமலரடியைத் தேடினார்.*

*அடிமுடி காணமுடியாத பரம்பொருளாக விளங்கினார் எம்பெருமான். அதனால் இருவரும் சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்று ஏற்றுக்கொண்டனர். அவர்கள் இருவரும் தாம் கண்ட சோதியை எல்லோரும் காணும்படி காட்டியருள வேண்டும் என்று விண்ணப்பிக்க அவர் திருக்கார்த்திகை நட்சத்திரத்தன்று ஜோதிப்பிழம்பாக காட்சியருளினார்.*

*இந்தத் தத்துவத்தை விளக்குவதே கார்த்திகை விளக்கீடு ஆகும். யோக நெறியால் அன்றிக் காண முடியாத தெய்வ ஒளியை திருவண்ணாமலையில் ஏறத்தாழ மூவாயிரம் அடி உயரத்தில் உள்ள மலைமேல் திருக்கார்த்திகை நட்சத்திரத்தன்று காணலாம்.*

*காந்த மலையிலே கலியுக தெய்வம் அருள்மிகு ஐயப்பனின் மகர ஜோதி!*

*திருவண்ணாமலையிலே அவர்தம் ஐயனின் அண்ணாமலை ஜோதி!*

மலை மீது காணப்படும் பெரும் செப்புக் கொப்பரையில் இருபத்து நான்கு முழம் துணி திரியாகப் போடப்படும். ஒரு மணங்கு கற்பூரத் தூள் சேர்த்துத் திரி சுற்றப்பட்டிருக்கும். இருபது மணங்கு நெய் ஊற்றி தீபத்தை ஏற்றுவார்கள். அந்த ஜோதியைக் காண பஞ்ச மூர்த்திகளும் எழுந்தருளுகின்றனர்.

இந்த ஜோதியானது பல மைல்களுக்கு அப்பால் பல நாட்கள் ஒளி வீசும். இவ்வொளி இம்மலையை அடுத்து யாவும் செந்நிற சிகப்பு நிறம் பொருந்திய வண்ணமாய் ஒளிர்ந்திடும். ஜோதிலிங்கமாகக் காட்சி தரும் திருவண்ணாமலை ஓர் அக்கினித் தலமாக விளங்குகிறது.

திருவண்ணாமலையில் குன்றின் சிகரத்தில் கார்த்திகை மாதத்தில் ஏற்றப்படும் ஜோதியானது. உலகம் முழுதும் உள்ள அஞ்ஞான இருளை அகற்றி மெய்ஞான ஒளியைப் பரப்பும் சிவஞான ஜோதியாகப் பிரகாசிக்கும் என்பது ஐதீகம். 'உடம்பெனுமனையகத்து உள்ளமே தகழியாக மடம்படும் உணர்நெய்யட்டி உயிரெனும் திரிமயக்கி இடம்படு ஞானத் தீயால் எரிகொள இருந்து நோக்கிற் கடம்பமர் காளைத்தாதை கழலடி காணலாமே.'

அன்றைய தினம் பக்த கோடிகள் ஜோதியைக் கண்டு சேவிப்பதால் பஞ்ச மூர்த்திகளின் அருட்கடாட்சத்தால் பஞ்சேந்திரியங்களை அடக்கும் ஆற்றல் பெற்று, மெய்ஞான சிந்தையுடையவர்களாக விளங்குவர் என்பது உட்பொருள். இந்த ஜோதியின் காரணமாகத் தான் மற்ற இடங்களில் சொக்கப்பனை கொளுத்தும் பழக்கம் ஏற்பட்டுள்ளது.

தீபம் ஏற்றி வழிபட முடியாத சிவ, விஷ்ணு ஆலயங்களின் முன்புறத்தே வாழை மரம் நட்டு தென்னோலைகளால் அதனை சுற்றி அடைத்து 'சொக்கப்பானை'க்கு அக்கினியிட்டு ஜோதி வடிவாகக் காட்சியளிக்கச் செய்து சிவபெருமான் சோதிப்பிழம்பாகத் தோன்றிய காட்சியை நினைவுகூர்ந்து வழிபடுவர். ஜோதி மயமாய் ஒளி வடிவினனாகிய இறைவனை உணர்த்தும். சொக்கப்பனாகிய சிவனை ஒளி வடிவாகக் காண்பிப்பதால் இது சொக்கப்பனை எனப் பெயர் பெற்றது.

மலையில் தீபம் ஏற்றப்பட்டதும் மக்கள், ''அண்ணாமலையானுக்கு அரோகரா'' என விண்அதிர முழக்கமிடுவார்கள். ''இந்த உடம்பு நான் என்னும் எண்ணத்தை அழித்து, மனதை ஆன்மாவில் அழித்து, உன்முகத்தால் அத்வைத ஜோதியைக் காண்பது தான் தரிசனம் ஆகும்'' என ரமண மகரிஷிகள் குறிப்பிடுகிறார்.

தீப தரிசனம் பிறவிப் பிணியை அறுக்க வல்லது. கார்த்திகை தீபத்திருநாள் மிகவும் தொன்மை வாய்ந்த திருநாள். இத்திருநாள் தமிழர்களால் பல்லாயிரம் ஆண்டுகளாக கொண்டாடப் படுகிறது. கி.மு.2500 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் இலக்கியங்களிலும் மற்றும் சங்க கால இலக்கியங்களிலும் கார்த்திகை தீபத்தைப் பற்றிய குறிப்புகள் உள்ளன.

இத்தீபத்திருநாள், திருவண்ணாமலையில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுவதால், இதை திருவண்ணாமலைத் தீபம் என்றும் அழைப்பார்கள். இத்திருநாள், முருகக்கடவுள் அவதரித்த தினமாகவும் கொண்டாடப்படுகிறது. பெரும்பாலானோர் காலை முதல் விரதமிருந்து, மாலை பூஜை முடிந்தபின்னர், அகல் விளக்கேற்றி வரிசையாக வாசல் தொடங்கி வீடு

முழுவதும் வைப்பார்கள். இது தீபத் திருவிழாவில் இல்லங்களில் நிகழும் முக்கிய நிகழ்வாகும்.

கைலாயத்தில் ஈசன் ஏகாந்த தவத்தில் ஆழ்ந்திருந்த போது உமை, ஈசனின் பின்புறமாய் வந்து நின்று விளையாட்டாய் அவர் இரு கண்களைப் பொத்தினாள். அதனால் உலகம் இருண்டது. ஈசனின் வல, இடக் கண்களான சந்திர, சூரியர்கள் களையிழந்தனர். நெற்றிக் கண்ணாகிய அக்னியும் அன்னையின் கைவிரல் பட்டுக் குளிர்ந்து போனது. அதனால் வேள்விகள் தடைப்பட்டன. யாகங்களும், பூஜைகளும் இல்லாமல் போயின. உலகத்தில் அருள் ஒழிந்தது. இருள் சூழ்ந்தது. உலகங்கள் இருண்டதால் முனிவர்களும், தேவர்களும் அஞ்சினர். மதி மயங்கினர். கடமைகளை மறந்து முடங்கினர். அதனால் உலகம் தன் நிலையிலிருந்து தவறியது.

உமை விளையாட்டாய் இந்தச் செயலைச் செய்திருந்தாலும் அது தவறு என்பதால் அன்னை அஞ்சி நடுங்கிப் பிழை பொறுக்குமாறு இறைவனிடம் வேண்டி நின்றாள். தேவி, நீ விளையாட்டாகச் செய்தாலும் தவறு, தவறுதான். ஆதலால் நீ பூவுலகம் சென்று தவம் மேற்கொள்வாயாக! தக்க காலத்தில் யாம் வந்து உம்மை ஆட்கொள்வோம்' என்று கட்டளையிட்டார்.

அன்னையும் அவ்வாறே ஈசனின் கட்டளைப்படி பூவலகிற்கு வந்து தவம் செய்ய ஆரம்பித்தாள். அவ்வாறு அன்னை தவம் செய்து ஈசனின் அருள் பெற்று, சாப நிவர்த்தியான தலம்தான் அண்ணாமலை. சாப நிவர்த்தி மட்டுமல்ல; ஈசனின் உடலில் சரி சமமாக இடப்பாகம் பெற்றாள். அன்னை கார்த்திகை மாதத்தில் கார்த்திகை விரதம் இருந்து, கார்த்திகை நட்சத்திரத்தில் ஈசனின் இடப்பாகம் பெற்ற அந்த நன்னாள்தான் கார்த்திகை தீபப் பெருநாளாகக் கொண்டாடப்

படுகிறது. “எனக்கு நீங்கள் ஒளியுருவாகக் காட்சி தந்து ஆட்கொண்டது போல், வருடா வருடம் இது போல் ஒளியுருவாகத் தோன்றி உலகினரை உய்விக்க வேண்டும்” என உமை வேண்டிக் கொள்ள, ஈசனும் சம்மதித்தார். அதுவே தீபத் திருநாளாக அன்று முதல் கொண்டாடப்பட்டு வருகிறது.

*கார்த்திகைக்குக் கார்த்திகை நாள் ஒரு ஜோதி*
*மலை நுனியில் காட்டா நிற்போம்*
*வாய்த்து வந்த சுடர்காணில்*
*பசிபிணி இல்லாது உலகில் மன்னி வாழ்வார்*
*பார்த்தவர்க்கும் அருந்தவர்க்கும் இடையூறு*
*தவிரும் இது பணிந்தோர் கண்டோர்*
*கோத்திரத்தில் இருபத்துஓர் தலைமுறைக்கு*
*முத்திவரம் கொடுப்போம் என்றார்*

- என இதை அருணாசல புராணம் சுட்டுகிறது.

*புத்திதரும் தீபம் நல்லபுத்திரசம் பத்துமுண்டாம்*
*சித்திதரும் தீபம் சிவதீபம் - சக்திக்கு*
*உயிராகும் சோணமலை ஓங்கிவளர் ஞானப்*
*பயிராகும் கார்த்திகைத் தீபம்.*

- என்கிறது தீப வெண்பா.

’குன்றத்து உச்சிச் சுடர்’ என்று சீவக சிந்தாமணி இதன் சிறப்பை விரித்துரைக்கிறது.

அருணாசலத்தை கார்த்திகை தீபத்தின்போது வலம் வருவது மகத்தான புண்ணிய பலனைத் தரவல்லதாகும். அருணாசலத்தில் தீபம் ஏற்றும்போது அண்ணாமலையாரையும், உண்ணாமுலையம்மனையும் தரிசித்து விட்டுச் செய்யப்படும் கிரிவலத்தினால் அதுவரை செய்த பாபங்கள் நீங்குவதுடன் மகத்தான புண்ணிய பலனும் கிடைக்கும். கிரிவலத்தினை ஒரு மண்டலம் (48 நாட்கள்) தொடர்ந்து செய்வது



அவன் அதுவரை செய்த அனைத்து பாவங்களையும் நீக்கி அவனை பரிசுத்தனாக்க வல்லது. பதினோரு நாட்கள் தொடர்ந்து செய்யும் கிரிவலம் அவனுடைய வினைகளை நீக்கி, ஸகல ஸம்பத்துக்களையும் கொடுக்கும். கார்த்திகை தீபத்தன்று கிரிவலம் செய்பவனோ ஆயிரம் அசுவமேத யாகம் செய்த பலனை அடைகிறான். தீபத்தன்று சிவலிங்கத்தின் முன்னால் நெய் விளக்கு ஏற்றுபவன் வாழ்க்கை ஒளிரும். தீவினைகள் அகலும். அந்த தீபத்தை வலம் வருபவனின் ஒவ்வொரு அடிக்கும் அஸ்வமேத யாகம் செய்த பலனுண்டு. சகல தானம் கொடுப்பதால் ஒருவனுக்கு என்ன பலன் வருமோ, சகல தீர்த்தங்களில் நீராடினால் ஒருவனுக்கு என்ன பலன் வருமோ அது, கார்த்திகை தீபத்தை தரிசனம் செய்தாலே கிடைக்கும். கார்த்திகை மாதத்தில், கார்த்திகை நக்ஷத்திரத்தில் சோணாசல க்ஷேத்திரத்தில் தீபமேற்றினால் சந்தான ப்ராப்தி உண்டாகும்.

- என்றெல்லாம் அருணாசலத் தலவரலாறு மிகச் சிறப்பாக கார்த்திகை தீபமன்று கிரிவலம் வருவதன் சிறப்பை எடுத்துரைக்கின்றது.

# மனம்

## ஜெயா வள்ளியப்பன்

ஒரு அக்னி குண்டத்தில் தீயானது கொழுந்துவிட்டு எரியும்போது அதை அடங்கச் செய்ய தீயில் விறகைப் போடக்கூடாது.

அதைப்போல அலைக்கழியும் மனதை சாந்தியடையச் செய்ய வேண்டுமானால் அதை விஷயங்களைப் பற்ற விடக்கூடாது. பற்றுதலை நீங்குமாறு செய்துவிட்டால் மனம்தானே ஓய்ந்துவிடும்.

மனமானது விஷயங்களின் போகங்களை அனுபவிக்க அனுபவிக்க மனதின் வாசனை பலமடைந்து, விஷய வஸ்துக்களையே திரும்பத்திரும்ப நினைத்து அவற்றை மீண்டும் அனுபவிக்கும் ஆசையினால் அவதிப்படுகிறது. பொருளைப் பற்றிக்கொண்டு விரிவடைந்த மனமானது ஆன்மிக சாதனையினால் சுருங்கிச் சுருங்கி முடிவில் தேய்ந்து அழிந்துவிடுகிறது.

ஆசை மிகுந்து ஒரு பொருளைக் கண்டு மோகமடைதல் அதன்மேலுள்ள வேட்கையால் மயங்குதல், அதிர்ச்சியினால் மூர்ச்சையாதல் சொப்பனம் காணுதல் ஆகியவற்றை ஒழித்துவிட வேண்டும்.

ஒரு குட்டிச்சாத்தானைப் போல் மனம் - ஜீவன், பிராணன் புத்தியென்று தன் சகாக்களுடன் எப்படியோ சூட்சுமமாக வந்து குடியேறிவிட்டது. இதனை வெளியேற்றுவதற்கு ஒரே வழி இதனை ஒரு பொருளாக மதிக்காமல் உதாசீனப்படுத்தினால் இருந்தவிடம் தெரியாமல் போய்விடும்.

மனிதன் தன் வாழ்நாளில் பாதியைத் தூங்கியும் மீதி உள்ள நாட்களை சதா எதையாவது எண்ணி மனக்கோட்டை கட்டுவதிலேயே கழித்துவிடுகிறான்.

மனதை வெளியில் செல்லவிடாமல் விடாமுயற்சியுடன் யதார்த்த நிலையில் நிலைபெறச் செய்ய சதா முயன்று கொண்டே இருக்கவேண்டும்.

மனமானது எப்போது ஸ்திரத்தன்மை அடையுமோ, சலனமற்று இருக்குமோ, அப்பொழுது அந்த மனதை எந்தக் காரணத்தைக் கொண்டும் மீண்டும் சலனமுறும்படி செய்யக்கூடாது. ஏதாவது சந்தேகம் தோன்றினாலும் துளிக்கூட வேறெதையும் சிந்திக்கக் கூடாது.

இந்த உலகில் நடக்கும் சுப, அசுப காரியங்கள் சூரியனை எட்டாதது போல -

மண், நீர், நெருப்பு, காற்று - இந்த நான்கு பூதங்களின் குணங்களும் எல்லையற்ற ஆகாசத்தை ஒட்டாதது போலவும்

உலகில் உயிர்களால் செய்யப்படும் கர்மங்களின் குற்றங்கள், தர்மங்கள் எல்லாம் அந்த உருவத்தில் வியாபித்திருக்கும் பரவஸ்துவை அணுகவே அணுகாது. ஆதலால் அந்த ஆன்மாவை தியானம் புரிவாய்.

கற்றறிந்த கலைகள் யாவும் அறியாமையே என்பதை உணர்ந்து, அவைகளைக் கற்றவனாகிய தன்னை யாரென்று விசாரித்து அறிபவனே கல்வியை நன்கு கற்றுத்தேர்ந்த திறமை படைத்தவன் ஆவான்.

தியானத்தைப் பற்றிக் கூறும்போது,

உறக்கத்துக்கும் போகக்கூடாது.
அலைவதற்கும் விடக்கூடாது.
இரண்டுமற்ற சமாதி நிலையில் இருக்கவேண்டும்.

இறுதியாக மனஅவஸ்தைகளில் கொடுமையானது ஆசாபாசந்தான். இவற்றை நீக்குவதே மிகச் சிரமமான சாதனையாகும்.

ஆசையால் விளைந்தது அல்லலும் பூசலும்

ஆசையற்றதால் விளைந்தது ஆனந்த மோன இன்பம்

என்கிறார் ஈசன் பார்வதியிடம்.

இதனை ஒட்டி காஞ்சிப் பெரியவர் அவர்கள் தன்னுடைய தெய்வத்தின் குரலில் கூறியிருப்பது:-

“மனம் இருக்கும்வரை ஆசைகளும் இருக்கும். அதனால் மனதை அடக்கிவிடவேண்டும். மனம் அடங்கிவிட்டால் மரணநிலையில் இருப்பதுபோல் ஒரு சக்தியுமின்றி ஜடம்மாதிரி ஆவோம் என்று எண்ணக்கூடாது. மாறாக இதுதான் சகல சக்திகளுக்கும் ஆதாரமான நிலை.

“ஆத்மஞானிகளான ரிஷிகளின் சக்தியே இதற்குத் திருஷ்டாந்தம்.”

ஆதாரம்: தேவிகாலோத்தர ஞானாசார விசார படலம்

## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் - 2014

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| *நவம்பர்* | 06 | *வியாழன்* | *அதிகாலை* 4.30 | 08 | *வெள்ளி* | *அதிகாலை* 4.19 |
| *டிசம்பர்* | 05 | *வெள்ளி* | *மாலை* 6.30 | 06 | *சனி* | *மாலை* 6.13 |

## ரமணோதயம் காப்பு நிதி

## தொடரும் நன்கொடையாளர்கள்

*திரு* *சந்தானம், சென்னை 61* 500

*திரு* T.R.C. *சேகர், சென்னை* 501

# செய்திகள்

## திருவண்ணாமலை செய்திகள்

### ஸ்ரீ ரமணாச்ரமம்

முருகனார் ஆராதனை விழா

*பகவானது சீரிய அடியார் முகவைக்கண்ண முருகனாரின் 41-வது ஆராதனைவிழா இவ்வாண்டு 25-8-2014 அன்று சிறப்பு அபிஷேக வழிபாடுகளுடன் நடந்தேறியது.*

*26, 27, 28 ஆகஸ்டு ஆகிய மூன்று நாட்களில் முருகனார் இயற்றிய ரமண சந்நிதிமுறை முற்றோதல், நான்கு ஓதுவார்கள் - ராமநாதபுரம் இசைப்பள்ளி ஆசிரியர், தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோயில் ஓதுவார், மதுரை மீனாட்சியம்மன் கோயில் ஓதுவார் மற்றும் திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோயில் ஓதுவார் - வயலின் மற்றும் மிருதங்க இசைக்கருவிகளுடன் முருகனார் சந்நிதியில் முதன்முறையாக இசைநயத்துடன் நடைபெற்றது. பக்தர்கள் இச்சிறப்பு முற்றோதலில் திரளாகக் கலந்துகொண்டனர்.*

அருணை விஜய விழா

*பகவான் அருணையடைந்த செப்டம்பர் 1ஆம் தேதி ஆச்ரமத்தில் வழக்கம்போல விமரிசையாகக் கொண்டாடப் பட்டது. மதுரையிலிருந்து ரமண அன்பர்கள் ரமண மந்திரக் காப்பாளர் திரு. சோமசுந்தரம் தலைமையில் இவ்வாண்டும் வந்து சிறப்புப் பாராயணங்கள் செய்தனர். அருணை விஜய விழாவினையொட்டி அருணாசலேஸ்வரர் கோயிலிலும், ஆச்ரமத்திலும் சிறப்புப் பூஜைகள் செய்யப்பட்டன.*

நவராத்திரி விழா

*மக்களின் பண்பாட்டை வளர்க்கும் சாதனங்களுள் விழாக்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இந்தியாவில் கொண்டாடும் சிறப்பான விழாக்கள் பல. அவற்றுள்*

*முக்கியமானது நவராத்திரி. தமிழ்நாடு, ஆந்திர மாநிலங்களில் நவராத்திரி என்றும் , கர்நாடகத்தில் தசரா என்றும், வட மாநிலத்தில் பூஜா விழா என்றும் பெயரிட்டு இவ்விழா கொண்டாடப்படுகின்றது. வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்களும் ஆங்காங்கே கொண்டாடுவது வழக்கம்.*

*மகிஷாசுரன் என்ற அரக்கன் மக்களைத் துன்புறுத்திய போது, தங்களைக் காப்பாற்றி அருளுமாறு அன்னை ஆதிபராசக்தியிடம் அனைவரும் முறையிட்டனர். அன்னை ஒன்பது நாட்கள் போரிட்டு பத்தாவது நாள் மகிஷாசுரனை வதம் செய்து வெற்றி கொண்டாள். அந் நிகழ்ச்சியைக் கொண்டாடுவதே நவராத்திரி எனப் புராணங்கள் கூறுகின்றன.*

*விஜயதசமி அன்று புதிய தொழில்களையும், படிப்பையும் துவக்கினால் வளர்ச்சி ஏற்படும் என்பது நம்பிக்கை. நவராத்திரி நாட்களில் பெண்கள் ஆர்வத்துடன் வீடுகளை அழகுபடுத்துவார்கள். ஒன்பது நாளும் பராசக்தியை விதவிதமாக அலங்கரித்து விரதமிருந்து வழிபாடு செய்வார்கள். பொம்மைக் கொலு வைத்து சிறு குழந்தைகளையும், உறவினர்களையும் அழைத்து மங்கலப் பொருட்களுடன் பொங்கல், சுண்டல் அளித்து மகிழ்வார்கள்.*

*இத்தகு சிறப்பு வாய்ந்த நவராத்திரி விழா ஒவ்வோராண்டும் ஆச்ரமத்தில் வெகுவிமரிசையாக, சிறப்பாகக் கொண்டாடப் படுவது வழக்கம். அவ்வகையில் இவ்வாண்டும் நவராத்திரி விழா ஆச்ரமத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. அன்னை யோகாம்பிகையை செப்டம்பர் 23ஆம் தேதி மாலை 6 மணியளவில் ஊர்வலமாக எடுத்துவந்து கொலுமண்டபத்தில் அமர்த்தினர். அதன்பின் ஒவ்வொருநாளும் ஒவ்வொரு வித அலங்காரத்துடன் மாலை சிறப்புபூஜைகள் செய்யப்பட்டன. பின்னர் அக்டோபர் 3ஆம் தேதி யோகாம்பிகை அன்னை ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு கர்பகிருஹத்தில் அமர்த்தப் பட்டாள்.*

*ஒவ்வொரு நாளும் பெருந்திரளாக அன்பர்கள் கலந்து கொண்டு அம்மனின் அருளைப் பெற்றனர். ஆச்ரம இணையதளத்தில் அனைத்து நவராத்திரி பூஜை நிகழ்ச்சிகளும் மாலையில் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது.*

*ஆச்ரமத்தில் நிகழும் முக்கிய நிகழ்வுகளை* www.gururamana.net *என்ற இணைய தளத்தில் நேரடி ஒளிபரப்பில் காணலாம்.*

## Voice of Arunachala

ஸ்ரீ ரமணாச்ரமத்தின் 24 மணிநேர இணைய வானொலி

*ஆச்ரம 24 மணி நேர இணைய வானொலி சேவை ஜூலை மாதம் முதல் இயங்கி வருகிறது. இதில் பகவானது பாடல்கள், உபதேசங்கள், நூல்கள், ஆன்மிக சொற்பொழிவுகள், தேவார இன்னிசைப் பாடல்கள் ஒலிபரப்பாகின்றன. அன்பர்கள் இச்சேவையை ஆன்ட்ராய்டு மற்றும் ஐ-போன் மொபைல்மூலம் கேட்டு மகிழலாம்.*

# ரமண கேந்திரா செய்திகள்

## ரமண கேந்திரா, மைலாப்பூர், சென்னை

கல்வி ஊக்கத்தொகை வழங்கல்

20-7-2014

*ஒவ்வோராண்டும்போல் இவ்வாண்டும் ஏழை, எளிய பள்ளி, கல்லூரி மாணவ-மாணவியர்களுக்கு ரூபாய் 70,000 அளவிலான கல்வி ஊக்கத்தொகை 20-7-2014 அன்று ரமண கேந்திரா, மைலாப்பூர் மையத்தில் வழங்கப்பட்டது. இவ்விழா 'ரமணோதயம்' ஆசிரியர் டாக்டர் எஸ். ராம்மோஹன் தலைமையில் நடைபெற்றது. கேந்திரத்தின் டிரஸ்டிகள் ஸ்ரீமதி. சாந்தா ராமச்சந்திரன், ஸ்ரீமதி. சியாமளா ராமச்சந்திரன், திரு. வெங்கடகிருஷ்ணன்,* P.E. *சங்கர், ஸ்ரீமதி. மீரா பாலச்சந்தர் ஆகியோர் கலந்துகொண்டனர்.*





அருணை விஜயம்

*சென்னை ரமண கேந்திராவைச் சார்ந்த 55 ரமண அன்பர்கள் கடந்த ஆண்டுகளைப் போலவே இவ்வாண்டும் அக்டோபர் 1, 2 தேதிகளில் ஸ்ரீ ரமணாச்ரமத்திற்கு புனிதப் பயணம் மேற்கொண்டனர். சிறப்பு அபிஷேக, ஆராதனைகளில் பங்குகொண்டு, கிரிவலமும் செய்தனர்.*

# அருணை விஜய விழா மற்றும் அக்ஷரமணமாலை நூற்றாண்டு விழா

## ரமண சத்சங்கம், நங்கநல்லூர், சென்னை

*1-9-2014 அன்று நங்கநல்லூர் மாடர்ன் சீனியர் செகண்டரி பள்ளியில் பகவான் ரமண மகரிஷிகளின்*

*அருணை விஜய விழாவும், அக்ஷரமணமாலை நூற்றாண்டு விழாவும் மாலை 4 மணிக்கு பள்ளியின் கலையரங்கத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. டாக்டர் எஸ். ராம்மோஹன் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். இப்பள்ளி மாணாக்கர்கள் திரளாகக் கூடி அக்ஷரமணமாலை பாராயணம் செய்தனர். இவ்விழாவின் அனைத்து ஏற்பாடுகளையும் பள்ளி நிர்வாகம், முதல்வர் மற்றும் மாணாக்கர்கள் ஆத்மார்த்தமாக ஒவ்வோராண்டும்போல் இம்முறையும் பகவானின்பால் அத்யந்த பக்தியுடன் சிறப்பாக நடத்திய விதம் குறிப்பிடத்தக்கது.*

*- சுப்ரமணியம், நங்கைநல்லூர் சத்சங்கம்*

## ஸ்ரீ ரமண சத்சங்கம், வேலூர்

*வேலூர் ஸ்ரீ ரமணசத்சங்கத்தார் 1-9-2014 அன்று **பிரியா மஹால்**, ஆரணி ரோடில் பகவான் அருணையடைந்த நாள் மற்றும் அவர் இயற்றிய அக்ஷரமணமாலை நூற்றாண்டு விழாவினை மிகச் சிறப்பாக நடத்தினர். பிரியா மஹால் உரிமையாளர் திரு. வி.என்.டி. ரமேஷ் அவர்கள் இக்குளிர்சாதன அரங்கை இலவசமாக இவ்விழாவிற்காக அளித்தார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.*

*விழாத் துவக்கமாக மாலை 4.30 முதல் 6.30 வரை பகவான் அன்பர்கள் பகவான் இயற்றிய பாடல்களைப் பாராயணம் செய்தனர். 6.00 மணிக்கு சென்னை திரு. தியாகராஜன் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். விழாவின் முடிவில் அனைத்து அன்பர்களுக்கும் அருட்பிரசாதம் வழங்கப்பட்டது.*

*- சி.எஸ். நாகராஜன், வட்டாட்சியர் (ஓய்வு), அலைபேசி: 9345244925*

## ஸ்ரீ ரமண கேந்திரம், முருகனார் மந்திரம், இராமநாதபுரம்

*முகவைக்கண்ண முருகனாரின் 41-ஆவது ஆராதனை விழா, திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாச்ரமத்திற்குப்*

*பாத்தியமான, இராமநாதபுரம் முருகனார் மந்திரத்தில் 25-8-2014 திங்கட்கிழமை சுவாமி ஸ்ரீமத் பரானந்தமஹராஜ் அவர்கள், தாயுமானவர் தபோவனம், இராமநாதபுரம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சிகள் காலை 10.00 மணி முதல் மதியம் 12.00 வரை நடைபெற்றன. அருணாசல அக்ஷரமணமாலை மற்றும் ஸ்ரீ ரமண சந்நிதி முறைப் பாடல்கள் குழுமியிருந்த அனைவராலும் பாடப்பெற்றது. மதிய சிறப்புக் பூஜைக்குப் பின்னர் அனைவருக்கும் அன்னதானம் அளிக்கப்பட்டது.*

*அருணாசல அக்ஷரமணமாலை நூற்றாண்டையொட்டி நவராத்திரி நாட்களில் இராமநாதபுரத்தையும் அதை ஒட்டியுள்ள மூன்று கோயில்களில் அக்ஷரமணமாலை கூட்டுப்பாராயணம் நடைபெற்றது.*

*- சிரஞ்சீவி, காப்பாளர், முருகனார் மந்திரம்*

## ரமண கேந்திரம், திண்டுக்கல்

*இங்கு ஒவ்வொரு மாதக் கிருத்திகை நாளன்று பகவானை ஸ்கந்த ரமணனாய் பாவித்து நாகல் நகரிலுள்ள திருமண மண்டபத்தில் அக்ஷரமணமாலை கூட்டுப் பாராயணம் மற்றும் 1000 பேருக்கு அன்னதானமும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. 11-10-2014 அன்று 68ஆவது முறையாக இவ்விழா நடைபெற்றது. இவ்விழாவில் முன்பு சிறார்களாய் இருக்கும்போது கலந்துகொண்ட அன்பர்கள் பல்வேறு இடங்களில் இன்று பணியாற்றி வருகின்றனர். அவர்கள் 10 பேர் கொண்ட ஒரு குழுவினராக இருந்து ஆங்காங்கு இன்றும் அக்ஷரமணமாலை பாராயணம் செய்து வருகின்றனர். அவர்கள் சார்பாக இந்த 68ஆவது விழாவிற்கு ரூபாய் 10,000 முதல் தவணையாக அனுப்பி வைத்துள்ளார்கள். அவர்களில் இஸ்லாமியர்களும் அடக்கம் என்பது பாராட்டத்தக்கது.*

*- முத்தையா, திண்டுக்கல்*

# ரமண குடில், ஓசூர்

மகாபாரதம் மற்றும் ரமணோதயம் - அறப்பணி

*மாமேதை ம.வீ.ராமானுஜாசாரியார் அவர்களால் சமஸ்க்ருதத்தில் இருந்து தமிழாக்கம் செய்யப்பட்ட "மகாபாரதம்-கும்பகோணம் பதிப்பு" புத்தகம் தற்போது ஸ்ரீ சக்ரா பப்ளிகேசன்ஸ் சார்பில் மறு பதிப்பாக வெளிவர உள்ளது. தற்போது இந்தப் புத்தகத்தின் முந்தைய பதிப்புகள் கிடைக்காத நிலையில் தனது தளராத முயற்சியால் மீண்டும் இதனைப் புதுப்பிக்கும் வகையில் உயர்திரு வெங்கட்ரமணன் (ரமண பக்தர்) அவர்கள் வெளியிட உள்ளார் .*

*இத்தகைய சீரிய பணியில் தமிழுக்குத் தொண்டாற்றும் விதமாக ஹோசூர் ஸ்ரீ ரமண குடில் டிரஸ்ட் சார்பாக 10 புத்தகங்கள் தமிழகத்தில் உள்ள அரசு பள்ளிகள் மற்றும் நூலகங்களுக்கு இலவசமாக வழங்க முடிவு செய்யப் பட்டுள்ளது. இந்தச் செயல் பகவானின் நல்லாசியுடன் அவரது பிறந்த நாளன்று நாளைய தலைமுறையினருக்கு பயனளிக்கும் வகையில் பள்ளிகளைச் சென்றடையுமாறு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பணியில் பங்கு பெறுபவர்கள் மற்றும் பள்ளிக்கூடங்களுக்கு ரமணோதயம் 1000 இதழ்கள் இலவசமாக அளிக்கப்பட உள்ளது.*

*மகாபாரதம் புத்தகம் ஒன்பது பாகங்களாக பிரிக்கப்பட்டு பிரசுரம் செய்யப்பட இருக்கின்றது. ஒரு புத்தகத்தின் விலை (ஒன்பது பாகங்களின்) ரூ.5000 (விலைக்கழிவுக்குப் பிறகு) ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.*

*தனிப்பட்ட முறையிலும் தாங்கள் பிரதிகள் வாங்கி கொள்ள முடியும். முழு பணம் கொடுத்து முன்பதிவு அவசியம் இந்தச் சேவையில் பங்குகொள்ள விரும்புவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்: ஸ்ரீ ரமண குடில் டிரஸ்ட்-ஹோசூர்-தமிழ்நாடு:08643842772,08754040226.*

*புத்தகம் தங்களுக்கு போஸ்டில் அனுப்பி வைக்கப்படும்*

*- அசோக்குமார், ஸ்ரீ ரமண குடில், ஓசூர்*

## பகவான் ரமணரின் சேவை மையங்கள்

| | | |
|---|---|---|
| **மைலாப்பூர்** திரு R. வேங்கடகிருஷ்ணன், ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் | ........ | 24611397 |
| ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் மேலாளர் கண்ணன் | ........ | 9940418375 |
| **குரோம்பேட்டை,** ரமணாலயம் | ........ | 9444261296 |
| **கிழக்கு தாம்பரம்** திரு M.A. ராமசாமி | ........ | 9790873138 |
| **நங்கநல்லூர்** திரு S. இராமமூர்த்தி | ........ | 22244667 |
| **மாம்பலம்** திரு M.K. வைத்தியநாதன் | ........ | 23716495 |
| **விருகம்பாக்கம்** திருமதி கௌசல்யா | ........ | 24790635 |
| **கொளத்தூர்** கே.ஆர். கோபாலகிருஷ்ணன் | ........ | 9884355454 |
| **சூளைமேடு** திரு V. ரமணன் | ........ | 9444172623 |
| **புதுச்சேரி** ரமண கேந்திரம் | ........ | 0413-2272141 |
| **மதுரை** சோமசுந்தரம் | ........ | 04522348157/2346102 |
| **இராமநாதபுரம்** சிரஞ்சீவி | ........ | 9360047936 |
| **திருச்சுழி** ஹாலாஸ்ய பட்டர் | ........ | 9442004615 |
| **மலையாண்டிபட்டினம்** பாலசுப்பிரமணியம் | ........ | 9965622878 |
| **பொள்ளாச்சி** ரமண குமார் | ........ | 9487016880 |
| **ஒட்டன்சத்திரம்** வடமலைக்கண்ணன் | ........ | 9842912474 |
| **பழனி** என். சோமசுந்தரம் | ........ | 9942327770 |
| **சேலம்** குப்புசாமி | ........ | 0427-2295460 |
| **வந்தவாசி** டாக்டர் ரவி | ........ | 9787180757 |
| **மடம்** சுந்தரமூர்த்தி | ........ | 9942264556 |
| **திண்டுக்கல்** பழ. முத்தையா | ........ | 9443070924 |
| **பூண்டி** மாரியப்பன் | ........ | 9486576687 |
| **ஓசூர்** அசோக்குமார் | ........ | 8643842772 |

---

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.






With Pranams...

**SRIPAD STEELS PRIVATE LIMITED**

Chennai

Registered with the Registrar of Newspaper for India RNI No.: TNTAM/2001/5542

